# செம்மணி

நிலம் 3 துகள் 109 வள்ளுவர் ஆண்டு 2052, 20 - 26 ஆவணி 2022 வாரமலர் பக்கங்கள் 24





## 12 நிரப்பு நிலையங்களுக்கு தடை

எரிபொருள் நிரப்புவதில் கியூ. ஆர். முறையைச் சரிவரக் கடைப் பிடிக்காத 12 நிரப்பு நிலையங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயரத்ன தெரிவித்தார்.
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வுக் கூட்டம் வெள்ளிக் கிழமை நடந்த

பக்கம் 03

## கோட்டா மாதிரியே ரணிலும் ஓடவேண்டிய நிலை வரும்


*ராஜபக்ச ஆதரவு அரசுக்கு எதிராக தொடர் போராட்டம் எனவும் ஜே.வி.பி. எச்சரிக்கை*



மக்களின் அமைதியான போராட்டங்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி மேற்கொள்ளும் அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தவில்லையாயின் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச ஓடியமாதிரியே ரணில் விக்கிரமசிங்கவும் ஓடவேண்டி வரும் என்று எச்சரித்துள்ளது ஜே.வி.பி.
அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வெள்ளிக்கிழமை பெலவத்தையிலுள்ள கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பக்கம் 03

## முட்டை விலை இனி 43 ரூபா!



முட்டை விலையை 43 ரூபாவாக அறிவித்து சிறப்பு அரசிதழ் வெளியிட்டுள்ளனர் தற்போதைய ஆட்சியாளர்கள்.
விலங்குணவுப் பொருள்களின் விலைகள் சடுதியாக உயர்ந்ததன் கார

பக்கம் 02

## கோட்டா திரும்பி வந்தால் நிதிக் குற்ற விசாரணை

*அவர் மீது வேண்டும் என்கிறது சஜித் கட்சி*



இலங்கையின் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்பினால், நிதியை முறைகேடாகக் கையாண்டதற்காக அவர் விசாரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி.
கோட்டாபய விரைவில் நாடு திரும்புவார் என்று செய்திகள் வெளியாகும் நிலையில் வெள்ளிக்கிழமை இதனை வலியுறுத்தியது ஐக்கிய மககள் சக்தி.
"கோட்டாபய இந்த நாட்டின் குடிமகன். அவர் தனது தாய் நாட்டுக்குத் திரும்புவதற்கு எல்லா உரிமையும் இருக்கின்றது. யாரும் அந்த உரிமையை மறுக்க முடியாது. அதேநேரம் அவர்

பக்கம் 03

## வீட்டு விலை ஒரு வருடத்துள் 45.17 சதவீதம் எகிறியடித்தது

*ஆனால் காணி விலை பாதாளத்திற்குள் சரிவு*

கடந்த ஒரு வருட காலத்தினுள் நாட்டில் குடியிருப்பு வீடுகள் மற்றும் கட்டடங்களின் விலைகள் 45.17 சதவீதம் உயர்ந்துள்ளன என்று லங்கா புரொப்பர்ட்டி வெப் என்ற நிறுவனத்தின் வீடுகளுக்கான விலைப்பட்டியல் விவரம் தெரிவிக்கின்றது.
அதேவேளை காணிகளின் விலைகள் 62 சதவீதத்தால் குறைந்துள்ளது.
டொலருக்கு எதிரான ரூபாயின் பெறு

பக்கம் 03

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**



# அடக்குமுறையை உடன் கைவிடவேண்டும் ரணில்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவர் வசந்த முதலிகே உள்ளிட்ட சிலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை யூனியன் பிளேஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஏனைய 16 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதே குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட முதலிகே 90 நாட்களுக்கு காவல்துறையின் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதிலிருந்தே இது ஒரு தெளிவான பழிவாங்கல் நடவடிக்கை என்பது வெளிப்படையானது. அரச தலைவரான ரணில் விக்கிரமசிங்க இதனை ஒருபோதும் அனுமதிக்கவே கூடாது.

ஆடி (ஜூலை 9ஆம் நாள் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவை நாட்டைவிட்டு ஓடவைத்த மக்கள் எழுச்சிக்கு பிள்ளையார் சுழி போட்டதில் இந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையும் அதன் தலைவரும் முக்கிய மானவர்கள். அந்த மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த அரச தலைவர் ஆடி 8ஆம் நாள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்த போதும் ஊரடங்கு நேரத்திற்கு முன்பாகவே பெரும் எண்ணிக்கையான மக்களை காலி முகத் திடலில் ஒன்று சேர்த்து அந்தப் போராட்டத்தை வெற்றியாக்கியதன் பின்னணியில் முதலிகேயின் பங்களிப்பை எவரும் மறுக்க முடியாது.

அதேபோன்று தற்போதைய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைப்பதிலும் முதலிகேயும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையும் தீவிரமாக இருக்கின்றன. அவர்களைச் சுதந்திரமாக விட்டால் ஒருவேளை தனது ஆட்சிக்கும் அடுத்து வரும் மாதங்களில் ஆபத்து வரக் கூடும் என்று நினைத்து முதலிகேயை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ரணில் தடுத்து வைத்திருப்பதாகவே தோன்றுகின்றது. முதலிகேயை தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் முன்னாள் தரைப் படை மூத்த தளபதிகளில் ஒருவருமான கமால் குணரத்னவால் வழங்கப்பட்டுள்ளது. இவர் குருதிச் சகதியை ஓடவிட்ட இறுதிப் போரில் கள மாடிய படை அதிகாரி என்பதுடன் தப்பியோடிய அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் நெருங்கிய சகா என்றும் அறியப்பட்டவர். இந்த நிலையில் முதலிகேயை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பது முற்றுமுழுதான அடக்குமுறை. தனது ஆட்சியைத் தக்க வைப்பதற்காக ரணிலும் தனது சகாவை பதவியிழக்க வைத்ததற்காக பாதுகாப்புச் செயலர் கமாலும் மேற்கொள்ளும் பழிவாங்கல் நடவடிக்கையை இதனைக் கருதிக் கொள்வதற்கு எல்லா விதமான வாய்ப்புகளும் இருக்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஒத்துக்கொண்டு அது தொடர்பில் "நல்லாட்சி" அரசு காலத்தில் நடவடிக்கையும் எடுப்பதாக உறுதியளித்த ரணில் விக்கிரமசிங்க இப்போது அந்தச் சட்டத்தையே பயன்படுத்தி அடக்குமுறையை நிகழ்த்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் எழுச்சியை அடக்குவதற்கான எத்தனமே இது. அது தவறு. தான் அதிகாரத்திற்கு வந்ததும் மக்களை அடக்கி ஒடுக்கி அதனைத் தக்கவைப்பதற்கு ரணில் முயலக்கூடாது.

எனவே உடனடியாக முதலிகே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழிருந்து வெளியே எடுக்கப்படவேண்டும். அவர் சட்டத்திற்குப் புறம்பாக நடந்திருப்பாராயின் அவரை சாதாரண சட்டங்களின் கீழேயே நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். மக்களை அடக்கி தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்கு முயல்வதை விடுத்து, பொருளாதாரத்தைச் சீரமைத்து மக்களுக்கு உதவுவதன் மூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கே ரணில் முயற்சிக்கவேண்டும்.

# 24ஆம் நாள் வருகிறது நாணய நிதியக் குழு!

பன்னாட்டு நாணய நிதிய பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கை வந்து நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பான உதவிகள் குறித்து மீண்டும் பேச்சுக்களைத் தொடங்க உள்ளனர். கடும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட இலங்கை அதனைச் சமாளிக்கும் வகையிலும் தன்னால் செலுத்தமுடியாமலுள்ள படுகடனிலிருந்து மீளும் வகையிலும் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்த உதவிகளைப் பெறுவதற்குப் பேச்சு நடத்தி வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சி அதிகாரத்திலிருந்த போது இது தொடர்பான பேச்சு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் மக்கள் கிளர்ச்சி காரணமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோட்டாபய நாட்டைவிட்டுத் தப்பியோடிய நிலையில், அந்தப் பேச்சுக்கள் அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ந்து நடந்து வந்தது.

இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுக்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் நடந்து வந்த இந்தப் பேச்சுக்கள் இந்த மாத இறுதிக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுவதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க வியாழக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நெருக்கடிக் கடன் திட்ட அதிகாரிகள் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்ரனிலிருந்து 24ஆம் நாள் கொழும்புக்கு வருகை தரவுள்ளனர். 31ஆம் நாள் வரையில் இங்கு தங்கியிருக்கும் அவர்கள் இலங்கைக்கான கடன் திட்டத்தை, நிகழ்ச்சி நிரலை இறுதி செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையை இறுதி செய்வதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று பன்னாட்டு நாணய நிதியத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சீனா, இந்தியா உட்பட பல அமைப்புக்களிடமும் கடன்களைப் பெற்றுள்ளது. கடன் பத்திரங்கள் மூலமும் நிதிகளைத் திரட்டியுள்ளது. அவற்றை மீளச் செலுத்துவதற்கான நிலைத்தன்மை தற்போது இல்லாத நிலையில் பன்னாட்டு நிதியத்தின் எந்தவொரு கடன் திட்டமும் ஏனைய கடன் வழங்குநர்களின் உத்தரவாதத்தின் உதவியுடனேயே செயற்படுத்தப் பட முடியும் என்கிறார்கள் நாணய நிதிய அதிகாரிகள்.

## முட்டை...

ணமாகவும் ஏனைய பொருள்களின் விலை உயர்வு மற்றும் அவற்றைப் பெறுவதற்கான தட்டுப்பாடு, மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை என்பன காரணமாக முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன.

சந்தையில் முட்டை ஒன்று 60 ரூபா வரையிலும் கோழி இறைச்சி 1,200 ரூபாவிற்கும் அதிகமாகவும் விற்பனையாகின்றன. இந்த நிலையைச் சமாளிக்க இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பின்னணியிலேயே முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளை முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாகவும் சிவப்பு முட்டை ஒன்றின் அதிகூடிய விலை 45 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த விலைகளைவிடக் கூடுதலாக விற்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## கோட்டா...

"நாடு எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளுக்கு முடிவு காண முயற்சிப்பதற்குப் பதில் மக்கள் மனதில் பயத்தை விதைப் பதிலேயே ரணில் விக்கிரமசிங்க குறியாக இருக்கிறார். தற் போதைய நெருக்கடிக்கு தீர்வுகளையும் அதன் பாதிப்புக் களிலிருந்து மீள்வதற்கான உதவிகளையும் எதிர்பார்த்துள்ள மக்களைப் பயமுறுத்துகிறார்" என்றார் ரில்வின்.
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையினர் வியா ழக்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது காவல்துறையி னர் மேற்கொண்ட மிக மோசமான அடக்குமுறையை அவர் கண்டித்தார். "அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற் கான மக்களின் உரிமை அரசமைப்பின் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. போருக்குத் தயாரானது போன்று தயா ராகி நின்ற ஒரு பட்டாலியன் காவல்துறையினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது" என்று அவர் தெரிவித்தார்.
ராஜபக்சக்கள் ஆதரவுச் சக்திகளால் நியமனம் செய்யப் பட்ட ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.
"அவர் (ரணில்) ராஜபக்சக்களைப் பாதுகாக்கிறார். மக்க ளாட்சித் தத்துவத்தின் கீழும் தாராளவாதத்துடனும் அமை தியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீதுகூட அடக்கு முறை கட்டவிழித்துவிடப்படுகின்றது. ஆட்சியாளர்கள் இதனை உடனடியாக நிறுத்தவேண்டும். அதைச் செய்யத் தவறினால் மீண்டும் மக்கள் கிளர்ச்சி வெடிக்கும். கோட் டாபயவைப் போலவே ரணிலும் ஓடவேண்டி வரும்.
மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண் பதற்குப் பதில் ராஜபக்ச ஆதரவுச் சக்திகளுடன் சேர்ந்து தனது அதிகாரப் பிடியை இறுக்கிக்கொள்வதிலேயே கவன மாக இருக்கிறார் ரணில். அதனால் மிக விரைவிலேயே அடுத்த மக்கள் போராட்டம், கிளர்ச்சி வெடிக்கும்.
மக்களின் பேராணை இல்லாத இந்த ஆட்சியை ஓட ஓட விரட்டும் உரிமை மக்களுக்கு உண்டு. அந்த முயற்சிக்கு தலைமை தாங்க தேசிய மக்கள் சக்திக் கூட்டணியுடன் இணைந்து ஜே.வி.பி. தயாராக உள்ளது. தற்போதைய ஆட் சியாளர்கள் பதவி விலகவேண்டும் என்பதை வலியுறுத்தி சனிக்கிழமை முதல் எமது கட்சி தொடர்ச்சியான போராட் டங்களை இனி நடத்தும்.
இந்த ஆட்சியாளர்களுக்கு மக்களின் சக்தி என்ன என்பது காட்டப்படும். மக்கள் ஆணை பெற்ற ஆட்சி அமைவதற்கு ஏற்ற வகையில் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அழுத்தம் கொடுக்கப்படும்."
இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## கோட்டா திரும்பி...

பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியது தொடர்பில் விசா ரிக்கப்படவேண்டும்" என்றார் ஐக்கிய மக்கள் சக்தி யின் தவிசாளர் அஜித் பி.பெரேரா.
அரச தலைவர் பதவி மூலம் அவருக்கு இதுவரை கிடைத்திருந்த விதிவிலக்கு இனி இல்லை என்பதால் அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவேண்டும் என்று பெரேரா வலியுறுத்தினார்.
அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந் தித்த பொது ஜன பெரமுன கட்சியின் பிரதிநிதிகள், கோட் டாபய நாடு திரும்புவதற்கு அரச தலைவர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியி ருந்தது. அந்தக் குழுவில் கோட்டாவின் தம்பியும் முன் னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்சவும் அடங்கியி ருந்தார்.இதற்கிடையில் மிக விரைவில் கோட்டாபய ராஜ பக்ச நாடு திரும்புவார் என்று அவரது உறவினரான உத யங்க வீரதுங்க தெரிவித்திருந்தார்.
"தனது பெற்றோருக்கு நினைவிடம் அமைத்தது தொடர் பில் கோட்டாபய ராஜபக்ச மீது ஏற்கனவே நீதிமன்றில் வழக்கு உள்ளது. அந்த வழக்கு மீண்டும் எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படவேண்டும். மேலதிக நிதிக் குற்றச்சாட் டுக்களும் அவர் மீது சுமத்தப்படவேண்டும். அவருக்கு அரச தலைவர் பதவி மூலம் கிடைக்கும் எந்தவொரு விதி விலக்கும் இனிக் கிடையாது என்கிற நிலையில் அவர் குற்ற வாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அவருக்கு தண்டனை வழங்கப்படவேண்டும்" என்று வலியுறுத்தினார் அஜித் பி.பெரேரா.

## வீட்டு விலை...

மதி இழப்பால் கட்ட மூலப் பொருட்களின் விலைகள் தாறு மாறாக உயர்ந்துள்ளன. அத்தோடு பொரு ளாதாரச் சரிவு காரணமாக மூலப் பொருட்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு வங்கிகளின் வீட்டுக் கடனுக்கான வட் டியும் எக்கச் சக்கமாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமை கள் புதிய வீடுகள் அமைக்கப்படுவதை கிட்டத்தட்ட முற் றாகத் தடை செய்துள்ளன. அதுவே வீடுகள், சொத்துக்க ளின் விலை எகிறியிருப்பதற்கான காரணம் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
2021 ஆனி மாதத்துடன் ஒப் பிடும்போது இலங்கை முழு வதும் வீடுகளின் விலை 21.85 சதவீதத்தினால் உயர்ந் துள்ளது. கொழும்பில் தொடர் மாடி வீடுகளின் விலை 32.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதே காலப் பகுதியில் சீமெந்தின் விலை 187 சதவீதம் உயர்ந்துள்ளது என்று கூறு கின்றது கட்டுமான தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபை.
இதேவேளை, மேட்டுநிலக் காணிகளின் விலை 62.90 சதவீதத்தால் குறைந்துள்ளது என்று கட்டுமானத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். கட்டுமானப் பொருட்க ளின் விலை உயர்வு காரணமாக மக்கள் புதிய வீடுகளைக் கட்டுவதில் ஆர்வம் செலுத்தாத நிலையில் காணிகளில் முதலி டுவதற்கும் அவற்றை வாங்குவதற்கும் ஆட்களில்லை என்பதே இதற்குக் காரணம் என்று அவர்கள் கூறுகின்றனர்.
உள்ளூர்வாசிகள் காணிகளை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை என்கிறபோதும் வெளிநாடுகளில் உள்ளவர் கள் டொலர் பெறுமதி தமக்குச் சாதமாக இருப்பதன் கார ணமாக அதில் சிறிதளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்கி றார் கொழும்பில் தொடர்மாடிக் குடியிருப்புக்களை அமைக் கும் நிறுவனத்துக்குச் சொந்தக்காரரான கீதல் பெரேரா.

## 12 நிரப்பு....

போது அமைச்சின் வழிகாட்டல் நெறிமுறைகளைப் பின் பற்றாமல் மீறி நடந்த 12 நிரப்பு நிலையங்களுக்கும் தடை விதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.இந்த மீளாய்வுக் கூட்டத்தில் சில நிரப்பு நிலையங்கள் கியூ.ஆர். முறைமையை மீறிச் செயற்படுவது தொடர்பிலேயே அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. நிரப்பு நிலை யங்களைத் தொடர்ந்து அவதானித்து விதிமுறை களுக்குப் புறம்பாக நடக்கும் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் பொது மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று அவற்றை தொடர்பு பட்ட காவல்துறை நிலையங்களில் கையளிக்குமாறும் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதி காரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.



# கோட்டை கொத்தளங்கள்...?

பிருந்தா

கோட்டை கொத்தளங்கள் என்று பேச்சு வாக்கிலும் எழுத்து வழக்கிலும் இருக்கின்ற சொல்லாடலைப் பலரும் கேள்விப் பட்டிருப்பீர்கள். கோட்டை பற்றியும் அறிந்தி ருப்பீர்கள். ஆனால், இந்தக் கொத்தளங்கள் பற்றி அறிந்திருப்போர் அரிது. அதென்ன கொத் தளங்கள்...? அவை எங்கு எப்படியிருக்கும்...?

கோட்டை என்ற சொல்லுடன் சேர்த்துக் கொத்தளங்கள் என்றும் பேசப்படுகிறது. கற்க ளால் மிக உறுதியாகக் கட்டப்பட்டிருப்பது கோட்டை. நமது யாழ்ப்பாணக் கோட்டையை அதற்கு உதாரணமாகக் கூறலாம். சுவர்களின் ஓரமாகப் பெரிய அகழிகள் வெட்டப்பட்டிருக் கும். மிக உறுதியான கற்களால் கட்டப்பட்டி ருந்தாலும் அகழிகளால் சூழப்பட்டிருந்தாலும் கோட்டை நோக்கி யாராவது படையெடுத்தால் அவற்றை அவதானிப்பதற்கும் அங்கிருந்து தாக்குதல் நடத்துவதற்கும் பயன்படுபவைதான் இந்தக் கொத்தளங்கள்.

கோட்டையின் மையப் பகுதியிலிருந்து விலகி வெளிப் புறச் சுவர்களோடும் கோட்டை யின் சுற்றுப்புறத்தோடும் தொடர்புடைய பகுதி களில் அமைக்கப்பட்டிருக்கும். சிறிய காவலரண்களைப் போல கோட்டை விளிம்புகளில் சுவரைவிடச் சற்று உயரமாக இருக்கும் கொத்தளங்கள்.

கோட்டைச் சுவருக்கு வெளியே விலகிப் பெரும்பாலும் முக்கோண வடிவத்தில் இந்தக் கொத்தளங்கள் அமைக் கப்பட்டிருக்கும். அவற்றிலிருந்து கோட்டைச் சுவர் ஓரங் களை இலகுவாக அவதானிக்க முடியும். எதிரிகள் அகழி யைக் கடந்து கோட்டைச் சுவர் ஓரத்துக்கு வருவதற்கு மிக அரிதாக வாய்ப்புகளுண்டு. எனவே கொத்தளங்களில்



இருந்து எதிரிகளின் நடமாட்டத்தை அவதானித்து ஈட்டி களால் எறிவது, ஈட்டி முனையில் தீப்பந்தங்கைளக் கொழுத்தி ஏவுவது போன்ற விடயங்களைக் காவலளிகள் மேற்கொள்கிறார்கள்.

இத்தகைய கொத்தளங்களில் ஈட் டிகளை வரிசையாக

நிறுத்தி வைத் திருப்பார்கள். ஆபத்து ஏற்படும் வேளைகளில் உடனடியாக எடுத்து வீசுவதற்குத் தயார் நிலையில் வைத்திருப்பார்கள். பழங்காலத்தில் பெரும் செல்வந்தர்களின் வாயிற் கதவுகளில் ஈட்டியைக் கொழுவி வைத்திருப்பார்கள். இதை இலகுவாக எடுத்து வீச முடியும். பிற்காலத்தில் அது அழகியல் விடயமாக மாறி ஈட்டி போன்ற கூரான வடிவங்களை வைத்துக் கேற் செய்யும் வழக்கம் வரை வந்தது. தற்போதுள்ள நவீன கேற்களிலும் இந்த ஈட்டி போன்ற அமைப்பைக் காண முடியும். கோட்டைகளில் உள்ள கொத்தளங்களைவிடச் சீனப் பெருஞ்சுவரில் அதிக கொத்தங்கள் இருப்பதையும் நாம் காணலாம்.

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டனரா?

சக்தியநாதன்



காலிமுகத்திடலில் தொடங்கிய போராட்டமானது அரச தலைவராக முன்னாள் படை அதிகாரி ஒருவர் பதவியிலிருந்தபோது மேற்கொள்ளப்பட்டது. 1971, 1989 காலப்பகுதியில் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது சிங்கள இளைஞர், யுவதிகள் வகை தொகையின்றிக் கொல்லப்பட்ட பின்னர் சிங்களவர்களால் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை இது. ஆனால் இந்தப் போரட்டம் பின்னர் பிசு பிசுத்துப் போனது... அதற்கு என்ன நடந்தது? போராடியவர்களுக்கு என்ன நடந்தது? போராடியவர்கள் ஏன் ஒடி ஒளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது? இவர்கள் யாரால் பயன்படுத்தப்பட்டார்கள் அல்லது யாரால் காட்டிக்கொடுக்கப்பட்டார்கள் என்றெல்லாம் இன்று பல கேள்விகள் எழுந்துள்ளன.

**ஜே.வி.பி - முன்னணி சோசலிசக் கட்சி முரண்பாடு**

'கோத்தா கோ ஹோம்' போராட்டத்தில் 22 அமைப்புகள் பங்கெடுத்தன என்றும் ஜே.வி.பி, முன்னணி சோசலிசக் கட்சி ஆகியன அதில் முக்கிய இடத்தை வகித்தன என்றும் அறிய முடிகிறது.

அரச தலைவர் மாளிகையைப் பெருந்தொகையான மக்கள் முற்றுகையிட்டு அங்கிருந்து அரச தலைவரைக் கலைத்தனர். அதனால் ஏற்பட்ட வெற்றிச் சூழலில் யார் அதைச் செய்தார்கள் என்பதை மக்கள் மத்தியில் ஒப்புவிப்பதி லேயே இவ்விரு கட்சிகளும் கவனம் செலுத்தின. போராட்டம் தொடங்கப்பட்ட நாள்களைவிட இந் தச் சூழலில் இவர்களுக்குள் போட்டிகள் அதிகரித்தன. இதற்காகச் சமூக வலைத் தளங்களை இரண்டு கட்சி ஆதரவாளர்களும் மாறி மாறிப் பயன்படுத்தினர்.

இது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மிகவும் பாதித்தது. அவர்கள் திட்டமிட்டபடி போராட்டத்தை நகர்த்திச் செல்வதில் இடையூறுகள் ஏற்பட்டன. இறுதி நாள்களில் சிங்கக் கொடியைக் கையில் ஏந்தியிருந்தவர்கள் எல்லோரும் போராடியவர்களாக ஊடகங்களில் காட்டும் நிலையும் தனி நபர்கள் பலர் தாம் நினைத்தபடி ஊடகங்களுக்குச் செவ்வியளிக்கும் நிலையும் காணப்பட்டது.

**அமைதிப் போராட்டம் வன்முறையானது**

நன்கு திட்டமிடப்பட்டு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட 'கோத்தா கோ ஹோம்' போராட்டம் வைகாசி (மே) 9ஆம் திகதி மகிந்த அணியினரின் தாக்குதலுடன் வன்முறைக் களமாக உருவெடுத்தது. அது வரை போராட்டத்தை தொடங்கி முன்னெடுத்து வந்தவர்கள் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முன்னரே யார் யாரோ எல்லாம் களமிறங்கி மகிந்த அணியினர் மீது எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் போராட்டம் வன்முறையானது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள் என நிலமை



மாறியது. போராட்டத்தைத் தொடங்கியவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடிவில்லை.

போராட்டத்துக்குத் தலைவர் யார் என்று தெரியாமலும், பொறுப்புக் கூறுவதற்கு யாரும் முன்வராத நிலையும் ஏற்பட்டது.

**அவசரகாலச் சட்டம்**

பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். வன்முறை, கைதுகள் என தொடங்கி எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இதனால் போராட்டத்திற்குச் சாதாரண மக்களின் ஆதரவு படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இது போராட்டக்காரர்களுக்குப் பின்னடைவாக அமைந்தது. அவர்களின் குரல் திட்டமிட்டு நசுக்கப்பட்டது. ஆவணி 5ஆம் திகதி மாலைக்குள் காலிமுகத்திடல் போராட்டக் காரர்களால் அமைக்கப்பட்ட கூடாரங்கள் அனைத்தும் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற உத்தரவைக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்தது. அதன் பின்னர் சிலர் தமது கொட்டகைகளை அகற்றினர்.

ஆவணி 9ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நாடு தழுவிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் ஜே.வி.பி. ஒரு புறமும், முன்னனிச் சோசலிசக் கட்சி இன்னொரு புறமும் ஏனைய அமைப்புகள் ஆங்காங்குமாக மக்களை அணி திரட்டியதால் அது அரசுக்கு எதிரான பேரணியாக அல்லாமல் வெறும் கூட்டங்களாகப் பிசு பிசுத்துப்போனது. இது போராட்டத்தை முன்னெடுத்தவர்களின் இலக்குகளைச் சிதைத்தது.

அதேநேரம் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமும் காவல்துறையினரையும் படையினரையும் பயன்படுத்தி அடக்கப்பட்டதுடன் முன்னணிப் போராட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

**நீதிமன்ற ஆணைக்கு எதிரான ரிட் மனுக்கள்**

காலிமுகத்திடலை விட்டு ஆவணி 5ஆம் திகதிக்குள் போராட்டக்காரர்கள் வெளியேறிவிட வேண்டும் என்ற கோட்டை நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக 4 ரிட் மனுக்கள் மேன் முறையீட்டு நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டன. லாஹிரு அன்ரன் மதுஷான் பெனான்டோ, ஹிரோஸ் அல்போன்சு, சங்கைக்குரி மீரா ஹகா வத்த காசியப்ப தேரர், அசங்க அபேரத்ன ஆகியோரால் அவை தாக்கச் செய்யப்பட்டன. இந்த 4 மனுக்களிலும் எதிராளிகளாகக் கோட்டை காவல் நிலையப் பொறுப்பாளர் லியனகே, காவல் துறை மேல் அதிகாரி சி.வி.விக்கிரமரத்ன, நகர அபிவிருத்தி அதிகார சபை, சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றில் மேற்படி ரிட் மனுக்களின் தீர்ப்பு சாதகமாக அமையாது விட்டால் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் வாய்ப்பும் இருந்தது.

**சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலை**

மேற்கூறப்பட்ட 4 ரிட் மனுக்களையும் போராட்டக்காரர்கள் தமக்கு விசுவாசமான சட்டத்தரணிகளை வைத்தே பதிவு செய்தனர். ஆனால் போராட்டக்காரர்களுடன் கலந்தாலோசிக்காமலேயே மேற்படி 4 மனுக்களும் சட்டத்தரணிகளால் திரும்பப் பெறப்பட்டன. இதனால் சட்டத்தரணிகள் தமது போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள் என்று போராட்டக்காரர்கள் கூறும் நிலை ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்துக்கு எதிராகப் போராடியவர்கள் - மழை முடிந்த பின் குடை பாரமாகிவிட்டது என்ற பாணியில் கைவிடப்பட்டுள்ளனர்.

தமது உயிரைப் பணயம் வைத்து முன்னணியில் நின்றவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஓடி ஒளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழர் தரப்பில் 30 வருட ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டம் முடிவுற்ற பின்னர் கருத்திலெடுக்கப்படவில்லை என்பதைச் சிங்களப் போராட்டக்காரர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அதை இனியாவது மனதிலிருத்திக்கொள்வதே நன்மை பயக்கும்.

**தமது உயிரைப் பணயம் வைத்து முன்னணியில் நின்றவர்கள் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஓடி ஒளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்**




# 'நீங்க வேறு நாடய்யா நாங்க வேற நாடு'




ரவீந்திரன்

தமிழீழக் கவிஞர் காசி ஆனந்தன். அவரது பாடல் ஒன்றில் சிங்களவரும் தமிழரும் ஒன்றல்லர் என்பதையும் அவ்விரு இனத்தாரின் நடையுடை பாவனைகள், உணவு வகைகள், பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் என எல்லாமே வேறு வேறானவை என்பதையும் ஒப்பிட்டுப் பாடியிருப்பார்.

'நீங்க வேறு நாடய்யா நாங்க வேற நாடு' எனச் சிங்களவர் தமிழர் ஆகிய இரண்டு இனங்களையும் வேறுபடுத்திக் காட்டியிருப்பார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தபோது "பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்" என்றொரு ஒப்பீட்டைச் செய்தது. இவ்விரு மண்ணும் ஒருபோதும் ஒன்றுடன் ஒன்று ஒட்டாது என்ற அர்த்தத்தில் சிங்களவரும் தமிழரும் ஒன்றாக வாழ முடியாது என்றது.

இன்றைய சூழலில் நீங்கள் வேற நாடய்யா நாங்கள் வேறு என்பதும் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது என்பதும் தமிழ் - சிங்கள இனங்களைத் தவிர்த்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலேயே பரவியிருப்பதாகவும் ஒப்பிடக்கூடியதாகவும் மாறியிருப்பதுதான் வேதனைக்குரியது.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நான்கு அணிகள் உருவாகிவிட்டன. சம்பந்தன் - சுமந்திரன் தலைமையிலான அணி, மாவை - அவரது கூட்டாளிகளின் அணி, செல்வம் அடைக்கலநாதன் அணி, புளொட் சித்தார்த்தன் அணி என அந்தக் கட்சிக்குள் நிலவுகின்ற தமிழ்த் தேசியத்தைப் பிரித்து வரையறுக்க முடியும். இதனால் அந்தக் கட்சி தலைவரின் கட்டுப்பாட்டில் இல்லாமல் கட்சிக்குள் அவரவர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர்.

ரணிலை அரச தலைவராக்குவதற்கு நடந்த வாக்கெடுப்பில் இதையே தெளிவாகக் காண முடிந்தது. அதன் பின்னர் ஆடு வளர்ப்பில் இறங்கி வெள்ளாடுகள், கறுப்பாடுகள் என இரு பெரும் பிரிவாகத் தம்மை வகைப்படுத்தி ஆளை ஆள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். 3 தமிழ்க் கட்சிகள்கூட இணைந்து செயற்பட முடியாத நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. எதிர்காலத்தில் தமிழ்த்

# சரக்கு உருண்டை



சமையல்
சமையல்

உங்களில் பலருக்கு இது கேள்விப்படாத உணவாக இருக்கலாம். சரக்கு உருண்டை என்பது குழந்தை பெற்ற தாய்மாருக்கு நமது சமூகத்தில் பழங்காலத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஆகாரம். இந்தச் சிறப்பு ஆகாரத்தில் பல மருத்துவ குணங்களும், ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மற்றும் சக்தியிழந்த உடலுக்கு வலுவளிக்கும் தன்மையும் இருக்கிறது என்பதாலேயே இதை நமது தமிழ்ச் சமூகம் காலம் காலமாகக் கடைப்பிடித்து வருகிறது.

பெண்கள் வட்டத்துக்குள் அதுவும் குறிப்பிட்ட காலத்துக்குள் மாத்திரம் பேசுபொருளாக இருக்கின்ற இந்தச் சரக்கு உருண்டை ஆகாரம் பற்றிப் பலரும் அறிவதற்குச் சாத்தியமில்லை. அது மாத்திரமன்றிப் பின்வந்த பெண்கள் தலைமுறையினர் இதை அருவருப்பாக அணுகத் தொடங்கிவிட்டதால் தற்போதைய பெண்கள் வட்டத்தினருக்குள் கூடப் பேணப்படாமல் அருகி வரும் ஆகாரமாகிவிட்டது இந்த உணவு. அது பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

சின்னச் சீரகம் - ஒரு மேசைக் கரண்டி, மல்லி - ஒரு மேசைக் கரண்டி, இஞ்சி அல்லது வேர்க்கொம்பு அதே அளவு, மஞ்சள், மிளகு ஆகியன ஒரு தேக்கரண்டி, புளி, நல்லெண்ணை சிறியளவு.

**எவ்வாறு தயாரிப்பது...?**

சின்னச் சீரகம், மல்லி, இஞ்சி, மஞ்சள், மிளகு ஆகியவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அம்மியில் வைத்து அரைத்தெடுக்க வேண்டும். அரைக்கும்போது ஈரலிப்புப் பதத்தில் இருக்கச் சிறிதளவு நீர் தெளிக்கவேண்டும். அரைத்தெடுத்ததும் புளி, நல்லெண்ணை ஆகியன சேர்த்துப் பிரட்டி நெல்லிக்காய் அளவான உருண்டையாகப் பூவரசம் இலையில் எடுத்துப் பரிமாறிக் கொள்ளலாம்.

குழந்தை பெற்ற தாய்மாருக்கு ஒரு மாத காலம் வரை இந்தச் சரக்கு உருண்டையை உண்ணக் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. அது மாத்திரமன்றி இதை அவர்களுக்கு வழங்கும் பத்தியக் கறியுடனும் சேர்த்து உண்ணக் கொடுக்கிறார்கள். ஆரோக்கியம் நிறைந்த இந்த ஆகாரத்தை நீங்களும் ஒரு தடவை தயாரித்துப் புசித்துப் பாருங்கள்.

தலைமைகள் ஒன்றிணைந்து ஒரு முடிவுக்கு வரமுடியாது என்பதை இது தெளிவாக ஒப்புவித்திருக்கிறது.

இதைவிட எஞ்சியுள்ள ரணிலின் ஆட்சியில் கூட்டமைப்பு மேலும் பிரித்து மேயப்பட வாய்ப்புகளுண்டு. பிரித்துக் கையாளும் தந்திரம் நிறைந்த ரணிலுக்கு வேஷ்டி கட்டிய கூட்டத்தைப் பிரித்துக் கையாள்வது ஒன்றும் சிரமமானதாக இருக்கப்போவதில்லை.

**சிங்கம் - மாடுகள் கதை**

இரண்டு எருதுகள் இணைபிரியாமல் எப்போதுமே ஒன்றாக இருந்தன. அவற்றை வேட்டையாட நினைத்த சிங்கம் ஒன்று எவ்வளவோ முயன்றும் அது சாத்தியப்படவில்லை. இதனால் இரண்டு மாடுகளையும் தமக்குள் மோத வைக்கத் திட்டம் தீட்டியது. மாடுகள் மேய்ந்து கொண்டிருந்த இடத்துக்குச் சென்று ஒரு மாட்டின் காதுக்குள் இரகசியம் சொல்வதுபோல பாசாங்கு செய்துவிட்டுச் சிங்கம் போய்விட்டது. மறுநாள் வந்து அடுத்த மாட்டுடன் இரகசியம் பேசிவிட்டுப் போனது. சிங்கம் சென்ற பின்னர் 'சிங்கம் உனக்குக் காதில் என்ன சொன்னது?' என்று ஒரு மாட்டை மற்றைய மாடு கேட்கச் சிங்கம் ஒன்றும் சொல்லவில்லை என்று மாடுகள் மாறி மாறி உண்மையைக் கூறின. ஆனாலும் நண்பர் எதையோ மறைக்கிறார் என்று ஒரு மாடு மற்றைய மாட்டைச் சந்தேகப்பட்டது. அதுவே இரண்டு மாடுகளுக்கும் பெரிய சண்டையாகி இணைபிரியாத மாடுகள் பிரிந்து விரோதிகள் ஆகின. அதன் பின்னர் சிங்கம் இரண்டு மாடுகளையும் இலகுவாக வேட்டையாடியது. இதே நிலைதான் தற்போது தமிழத் தேசியக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்புக்குள் 4 பிரிவுகள் அல்லது 4 அணிகள் எழுச்சியடைந்திருப்பதுபோல விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சிக்குள்ளும் அருந்தவபாலன், அனந்தி சசிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகிய அணிகள் இருக்கின்றன. விக்னேஸஸ்வரன் ரணிலுக்குச் சார்பாக வாக்களித்தது பற்றியும் அவர் அமைச்சுப் பதவியை ஏற்பது தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. கஜேந்திரகுமார் அணியில் கஜேந்திரகுமார், மணிவண்ணன் அணி என 2அணிகள் தோற்றம் பெற்றுவிட்டன. இதையெல்லாம்விடத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் வடக்கு அரசியல், கிழக்கு அரசியல் என இன்னோர் பிரிவும் இந்து, கிறிஸ்தவம் என மதரீதியான முரண்பாடுகளும் வளர்ந்து வருகின்றன. நீங்கள் வேறு நாடய்யா நாங்கள் வேறு நாடய்யா என்று அன்று சிங்களவருக்குக் கூறியது இன்று தமிழருக்குள் நீங்கள் வேறு தேசியம் நாங்க வேறு தேசியம் என்ற நிலையில் வந்து நிற்கிறது.

70



தர்மராசா

# சிறைக்குள்...

## சிங்களக் கைதிகளைப் பயன்படுத்தித் தமிழ்க் கைதிகளைக் கொன்ற சிறை நிர்வாகம்

நான் சிறைக்குச் செல்லும் வரை குமார் பொன்னம்பலம் என்பவர் ஒரு சட்டத்தரணி என்றே அறிந்திருந்தேன். உள்ளே போனபின்புதான் குமார் ஐயா என்ற சிறப்புப் பட்டம் கொண்டு கைதிகளால் அவர் அழைக்கப்படுவது புரிந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்த் தொடுக்கப்பட்ட பெரிய வழக்குகளைச் சாதாரண சட்டத்தரணிகள் பொறுப்பேற்கப் பின் வாங்கியபோது துணிந்து அவற்றைப் பொறுப்பெடுத்து அதை ஒரு சவாலாக முன்னெடுத்து பலரை விடுவித்த பெருமைக்குரியவர் அவர். அதைவிடச் சிறைச்சாலைகளுக்கு அடிக்கடி வருகை தரும் சட்டத்தரணியும் அவர்தான். அதனால் கைதிகளுக்கு அவர் மீது அதீத நம்பிக்கையும் ஈடுபாடும் இருந்தது.

குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்ட மறுநாள் கைதிகள் மீது அடக்குமுறையை மேற்கொள்ளும் அளவுக்குக் களுத்துறைச் சிறை நிர்வாகம் இருந்தது.

**1997** காலப்பகுதியில், காசுக் கட்டளை மூலம் (மணி ஓடர்) பெறுகின்ற பணத்தில் சவர்க்காரம், பற்பசை, பற்தூரிகை, பீடி ஆகியவற்றைச் சிறை நிர்வாகத்தினர் பெற்றுத் தருவார்கள். பின்னர் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு எதிராக உணவு தவிர்ப்புப் போராட்டங்களைக் கைதிகள் நடத்தியதைத் தொடர்ந்து வேறு பல பொருள்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**1998**இல் களுத்துறை 'டி' பிரிவில் தமது வழக்குகளைத் துரிதப்படுத்தக்கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கைதிகள் ஈடுபட்டனர். வழக்குகளைத் துரிதப்படுத்தாவிட்டால் சிறைச்சாலைக் கூரையிலிருந்து குதித்துச் சாவோம் என்று சொல்லிக் குதிக்கவும் செய்தார்கள். குதித்தவர்களில் ஒருவர் கடும் நோயாளியாகப் பின்னர் சிறையில் இருந்தார்.

**1998** மார்கழி **10**ஆம் நாள் பகல் தமிழ்க் கைதிகளுக்கு உணவைப் பங்கிடுவதில் சிங்கள அச்சுக்



# “புலிகளின் நிலத்தடிச் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தேன்“

பி.எம்.நந்தன சமன்சிறி 1985இல் இலங்கைக் காவல்துறையில் சேர்ந்தார். அக்கிரம்தொட என்ற படை முகாமில் பயிற்சி பெற்றார். 1990இல் மாங்குளம் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது புலிகளால் கைது செய்யப்பட்டார். 5 வருடங்கள் வரை புலிகளின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தனது சிறை வாழ்க்கை பற்றிய பல்வேறு அனுபவங்களை வெளச யூ ரியூப் தளத்தில் கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார்.

1990ஆம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் 7ஆம் திகதி (பொசன் பௌர்ணமி நாளன்று) நான் மாங்குளம் காவல் நிலையத்தில் பணியில் இணைந்தேன். பணியிலிருந்தபோது புலிகளிடம் சரணடைந்தேன். அப்போது புலிகளுக்கும் அரச தலைவர் பிரேமதாசவுக்கும் இடையில் சமாதானப் பேச்சுகள் நடந்துகொண்டிருந்தன. அன்ரன் பாலசிங்கம், யோகி, மாத்தையா ஆகியோர் கொழும்பு ஹில்டன் விடுதியில் தங்கியிருந்து பேச்சுகளில் ஈடுபட்டனர்.

**கமலநாதன்**

1990 ஜூன் 10,11,12 ஆம் திகதிகளில் இலங்கைக் காவல்துறையினர் 600 பேரைப் புலிகள் சுற்றிவளைத்துப் பிடித்துச் சரணடைய வைத்தார்கள். மாங்குளம் காவல் நிலையத்துக்குக் குகதாசன் என்ற காவல் அதிகாரி அப்போது பொறுப்பாக இருந்தார். இரண்டாம் நிலைப் பொறுப்பாளராகக் கோபாலகிருஷ்ணன் என்பவர் இருந்தார். குகதாசன் எமக்கு வகுப்பு எடுக்கும்போது புலிகள் மாங்குளம் காவல் நிலையத்தைச் சுற்றி வளைத்தால் எவரும் எதிர்த்துச் சண்டையிட வேண்டாம் - என்று கூறினார். அவ்வாறு எதிர்த்தாக்குதல் நடத்தினால் சமாதானப் பேச்சுக்கு அது குந்தகமாக அமைந்துவிடும் என்று ஆலோசனை கூறினார். 13ஆம் திகதியன்று நள்ளிரவு 12 மணியளவில் புலிகள் மாங்குளம் காவல் நிலையத்தைச் சுற்றி வளைத்தார்கள். அப்போது நான்

கைதிகள் பாரபட்சம் காட்டினர். இதனால் அவர்களுடன் பிரச்சினைப்பட்ட தமிழ் அரசியல் கைதி ஒருவர் சிங்களக் கைதி ஒருவருக்கு அடித்துவிட்டார். பின்னர் 'பி' வார்ட்டிலிருந்த சிங்களக் கைதிகள் 'டி' வார்ட்டிலிருந்த யோகேஸ்வரன் என்ற தமிழ்க் கைதியைத் தாக்கித் தலையை உடைத்துவிட்டார்கள்.

யோகேஸ்வரன் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறுகோரி மறுநாள் மார்கழி 11ஆம் திகதியன்று தமிழ்க் கைதிகள் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றைத் தொடங்கினர். மார்கழி 12ஆம் திகதியன்று சகல வார்ட்டுகளின் கதவுகளையும் சிறைச்சாலை ஊழியர்கள் திறந்து விட்டார்கள். சிங்கள அச்சக் கைதிகள் கற்கள், சிறு ஆயுதங்கள் போன்றவற்றைத் தயார் செய்வதைத் தமிழ்க் கைதிகள் கண்டுவிட்டனர். பெரிய தகரக் கதவுகளை எடுத்து வந்து போராட்டத்தில் இருந்த தாங்களே தங்களை அடைத்துப் பாதுகாப்புக் கவசம்போல பிடித்தார்கள். கோடரியால் கதவுகளைக் கொத்திப் பிற்பகல் 1.30மணியளவில் சிங்கள அச்சுக் கைதிகள் உள்ளே நுழைந்தனர். கதவுகளை மூடிப்பிடித்திருந்தவர்கள் விட்டுவிட்டு ஓடினர். அங்கு புகுந்த சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளைத் தாறுமாறாக வெட்டினர். பின்னர், 'சி', 'இ' வார்ட் மதில்களால் பாய்ந்து சிங்களக் கைதிகள் தப்பிப்போயினர்.

இந்தத் தாக்குதல் ஒரு மணிநேரம் வரை நீடித்தபோதும் சிறைச்சாலை ஊழியர்கள் அதைத் தடுக்க முற்படவில்லை. கண்டுகொள்ளவும் இல்லை. மாறாக அதை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தபடியிருந்தனர். இந்தத் தாக்குதலில் உடுப்பிட்டியைச் சேர்ந்த முத்துலிங்கம் தர்மலிங்கம் (சிறை இலக்கம் 5622), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகராசா சிவனேசன் (சிறை இலக்கம் 389), மன்னாரைச் சேர்ந்த எம்.எஸ். இஹ்ஹான் (சிறை இலக்கம் 19344) ஆகியோர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இதைவிட 17 கைதிகளுக்குக் கடும் காயம் ஏற்பட்டது. வார்ட்டின் பெரிய தகரக் கதவைத் திறக்க முடியாத அளவுக்குத் தமிழ்க் கைதிகள் இறுகப் பூட்டியதால் அங்கு அசம்பாவிதங்கள் எவையும் நடக்கவில்லை.

(தொடரும்)

5ஆவது காவலரணில் கடமையில் இருந்தேன்.

புலிகள் எங்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி காவல் நிலையத்துக்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கு தங்குமிடத்தில் நித்திரையாக விருந்த காவல்துறையினரை எழுப்பி அவர்களின் கைகளையும் பின்புறமாகக் கட்டினார்கள். அதன் பின்னர் தொடருந்துப் பாதைக்கு அப்பால் எல்லோரையும் அழைத்துச் சென்றார்கள். எங்களில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் என 14 பேர் இருந்தோம். அனைவரையும் ஒரு வாகனத்தில் ஏற்றிச்சென்று மல்லாவியில் ஒரு வீட்டில் தங்க வைத்தார்கள். அதன் பின்னர் தமிழ், முஸ்லிம் காவல்துறையினரை வேறாகப் பிரித்தார்கள்.

சிங்களக் காவலர்களைத் தனிமைப்படுத்தி துணுக்காய்ப் பகுதியில் 2 நாள்கள் வைத்திருந்தார்கள். அந்தப் பகுதி மாங்குளம் காவல்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதி என்பதால் நான் கடமையின் நிமித்தம் அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கிறேன்.

எம்மை வைத்திருந்த இடம் புலிகளின் முகாமாக இருந்தது. பதுங்கு குழிகளும், முட்கம்பி வேலிகளும் அங்கு காணப்பட்டன.

அதன் பின்னர் பெரிய மண்டபம் போன்ற ஓரிடத்துக்குக் கொண்டு சென்றார்கள். பெரிய மண்டபத்தின் ஒரு பகுதியில் படையினரின் சீருடைகள் குவித்து கிடந்தன. ஏனைய இடங்களில் குருதிக் கறைகள் இருந்தன. எம்மை அங்கு வைத்திருந்த போது வேறு எங்கோ இருந்து மேலும் ஒரு தொகுதிக் காவல்துறையினரையும் அங்கு கொண்டுவந்தார்கள். பின்னர்தான் எமக்குத் தெரியவந்தது அவர்கள் ஒட்டுசுட்டான் காவல்நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டார்கள் என்று. அவர்களைக் கொண்டுவந்த பின்னர் எல்லாமாக 44 சிங்களக் காவல்துறையினர் அங்கிருந்தோம்.

எங்களை இருவர் இருவராக வெளியே எடுத்தார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் அலறிக் கத்துவது கேட்டது. பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இறுதியில் நான் வெளியே எடுக்கப்பட்டேன். கால்கள் இரண்டையும் இரும்பு வளையங்களை வைத்து ஒட்டும்போது அதன் நெருப்புச் சுட்டு வேதனையில் கத்தியிருக்கிறார்கள். அதுவே எனக்கும் நடந்தது. கால்களில் ஒட்டிய இரும்பு வளையங்கள் இரண்டையும் பெரிய சங்கிலித் துண்டு ஒன்றை நடுவில் வைத்து இணைத்து ஒட்டினார்கள்.

கால்களை ஒட்டுவதற்கு முன்னர் காவல்துறைச் சீருடையைக் களைந்துவிட்டுச் சாரம் ஒன்றை உடுக்கத் தந்தார்கள். அதன் பின்னர் 20 அடி ஆழமும் 15 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்ட கிடங்கு ஒன்றுக்குள் (கிரவல் மண் கிடங்கு இயந்திர வாகனத்தால் தோண்டப்பட்டிருந்தது) அடைக்கப்பட்டோம். மேற்புறத்தில் முள்ளுக்கம்பிகளால் இறுக்கமாக அடைக்கப்பட்டிருந்தது. அதற்குமேல் கருவாட்டுக் கொட்டில்போல கிடுகால் வேயப்பட்ட கொட்டில்கள் போடப்பட்டிருந்தன. இவ்வாறு பல கொட்டில்களை ஆங்காங்கே காணமுடிந்தது.

அந்தக் கிடங்கின் ஒரு மூலையில் கயிறு ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. அந்தக் கயிற்றைப் பிடித்துக் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த நிலையில் கிடங்குக்குள் மெதுவாக இறங்கச் சொன்னார்கள். நிலத்தில் சாக்கு விரிக்கப்பட்டிருந்தது. 20 பேர் வரையில் இருக்கக்கூடிய அந்தக் குழிக்குள் 44 பேரையும் இறக்கினார்கள். இறுகிப்போய் இருந்தோம்.

**இரவில் சிறுநீர் கழிப்பதற்கு ஒரு சிறிய பிளாஸ்ரிக் வாளியும், அதை ஊற்றி வைக்க பெரிய பிளாஸ்ரிக் கலன் ஒன்றையும் தந்தார்கள். இரவு முழுதும் கழித்த சிறுநீரை மறுநாள் காலையில் கயிற்றில் கட்டி நாங்களே வெளியே எடுத்து ஊற்றவேண்டும்.**

இரவில் சிறுநீர் கழிப்பதற்கு ஒரு சிறிய பிளாஸ்ரிக் வாளியும், அதை ஊற்றி வைக்க பெரிய பிளாஸ்ரிக் கலன் ஒன்றையும் தந்தார்கள். இரவு முழுதும் கழித்த சிறுநீரை மறுநாள் காலையில் கயிற்றில் கட்டி நாங்களே வெளியே எடுத்து ஊற்றவேண்டும். காலையில் இருவர் இருவராகக் கயிற்றைப் பிடித்து மேலே ஏறிக் கட்டைகள் போட்டுச் செய்யப்பட்டிருந்த குழி மலக்கூடத்தில் இரண்டு தொங்கல்களிலும் இருவர் ஆளை ஆள் முகம் பார்த்தபடி மலம் கழிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. குளிக்க வாய்ப்பில்லை.

1990 ஆடி மாதம் 18ஆம் திகதியிலிருந்து இந்தத் துன்பமான சிறை வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியிருந்தது. அந்த நிலை 8 மாதங்கள் வரை நீடித்தது.



(தொடரும்)




# குக்கீ திருடன்கள்

ஹரி

யூ டியூப் சேனல்கள் ஏன் ஹேக் செய்யப்படுகின்றன? இதைத் தவிர்க்க என்ன செய்யவேண்டும்?

இணையத்தின் பெரும்பான்மை சுவா ரஸ்யம் காணொலிகள். காரணம், இப்படித்தான் இருந்தாகவேண்டும் என்ற விதிகளை உடைத்து வெளிவருபவை அவை. சில காணொளிகள் நொடிகளில் முடியலாம், சில மாரத்தானாக நாள் கணக்கில் ஒளிபரப்பாகலாம். கன்டென்ட் எனப்படும் உள்ளடக்கம் சிலவற்றில் இருக்கலாம். இல்லை சும்மா ஒருவர் உறங்குவது, ஜேசிபி இயந்திரம் வேலை செய்வது, பறவை பறப்பது என எதையும் பதிவாகக் கொண்டிருக்கும் காணொலியாகவும் இருக்கலாம். எதைப் பார்ப்பதற்கும் இங்கே ஆள் இருக்கிறது. அப்படிக் காணொலிகளில் காலம் கழியும் தொழில்நுட்ப யுகம் இது.

சிரமப்பட்டு கருத்து பேசி, சந்தாதாரர்கள் பிடித்து, கொஞ்சம் வருவாயும், சமூகத்தில் ஒரு நட்சத்திர மதிப்பும் ஒருவருக்குக் கிடைக்கும் நேரத்தில் அந்த சேனல் ஹேக் செய்யப்பட்டு, அதில் வேறு எவரின் காணொலிகளோ ஒளிபரப்பானால் அவருக்கு எப்படியிருக்கும்? அதைத் தொடர்ந்து பார்த்து வரும் பார்வையாளர்களுக்குத்தான் எப்படி இருக்கும்?

கூத்து என்னவென்றால், இதைப் பார்த்து அதிர்ந்து போய் சேனலின் சொந்தக்காரர் அவருடைய கணக்கில் லாக் இன் செய்தால், அதற்கான அனுமதி மறுக்கப்பட்டு 'நீ உரிமையாளனே இல்லை வெளியே போ!' என அடித்துத் துரத்தும் யூடியூப். ஏன் இப்படி நடக்கிறது? இப்படி நடந்தால் என்ன செய்வது?

எப்படி யூடியூப் சேனல்கள் ஹேக் செய்யப்படுகின்றன? அதில் ஒளிபரப்பாகும் க்ரிப்டோ காணொலிகள் என்ன? இதைத் தவிர்ப்பது எப்படி? இக்கட்டுரையில் காண்போம்.

யூடியூப் சேனல்களின் முக்கியமான ஓர் அம்சம் அதன் விளம்பர வருவாய். இதற்காக சேனல் நிர்வாகிகள் பல தயாரிப்புகளை விளம்பரம் செய்தும் விமர்சனம் செய்தும் காணொலிகளில் பேசுவர். நிறைய தயாரிப்புகளுக்கு விளம்பரம் / விமர்சனம் தேடி இவர்களுக்கு மின்னஞ்சல்கள் குவியும். ஹேக்கிங் என்பதற்கான முதல் கட்டம் இங்குதான் நடந்தேறுகிறது. எங்களது பொருளுக்கு விளம்பரம் / விமர்சனம் செய்து தாருங்கள், அதற்கான கட்டணத்தை நாங்கள் கொடுத்துவிடுகிறோம் என மின்னஞ்சல் வாயிலாகத் தொடர்பு கொள்வார்கள். குறிப்பாக, வைரஸ் எதிர்ப்பு மென்பொருள்கள், -விபிஎன் -(VPN), ஒளிப்படம் திருத்தும் மென்பொருள்கள், இணையத்தள விளையாட்டுகள், பங்குச்சந்தைச் செயலிகள், உடல்நலச் செயலிகள் போன்றவற்றுக்கான விளம்பரங்கள் கோரி வரும் மின்னஞ்சல்கள் அதிகமாக இருக்கும்.

எங்களது தயாரிப்பின் வெள்ளோட்டம் (Demo) உங்களுக்கு இலவசம். இந்த இணைப்பைச் சொடுக்கி எங்கள் தயாரிப்பைத் தரவிறக்கிக்கொள்ளுங்கள் என ஓர் இணைப்பையும் அனுப்பியிருப்பார்கள். நீங்கள், அதைச் சொடுக்கித் தரவிறக்கினால் கதை முடிந்தது. அவர்கள் வளர்த்த குக்கீ திருடன் சமர்த்தாக உங்கள் கணினியில் நுழைந்துவிடுவான். உங்களுக்கே தெரியாமல் உங்கள் கணக்கை தனது ஹேக்கர் உரிமையாளரிடம் ஒப்படைத்துவிடுவான்.

**யார் இந்த குக்கீ திருடன்?**

குக்கீ என்பது நாம் நுழையும் வலைப்பக்கங்களில் இருந்து நமது இணைய பிரவுசருக்கு அனுப்பப்படும் குறுங்கோப்புகள். நாம் அந்த வலைப்பக்கத்தில் என்ன தேடினோம், படித்தோம், வாங்கினோம், நமது கணக்கின் பயனர் பெயர், கடவுச்சொல் போன்ற தகவல்கள் இந்தக் குறுங்

கோப்புகளில் இருக்கும். ஒரு பயனரின் இணைய அனுபவத்தை மேம்படுத்துவதற்காக குக்கீ தகவல்கள் உதவும்.

நீங்கள் ஒரு வலைத்தளத்தில் நுழைந்தால், - எங்களது குக்கீகளை ஏற்கிறீர்களா - என ஒரு பட்டி திடீரென முளைக்குமல்லவா, அதை சரி ஏற்கிறேன் என கிளிக் செய்யாமல் சில வலைத்தளங்கள் உள்ளேயே அனுமதிக்காது. மேற்குறிப்பிட்ட சில தகவல்களைப் பதிவுசெய்வதற்குதான் பயனரின் அனுமதி வேண்டி அப்படிக் கேட்கிறது.

உதாரணமாக, ஒரு வானிலைத் தளத்தில் நுழைந்து உங்கள் ஊரைத் தேர்ந்தெடுத்து என்ன வானிலை எனப் பார்க்கிறீர்கள். அடுத்த முறை அந்தத் தளத்தில் நீங்கள் நுழைந்ததும் உங்களை அலையவிடாமல் உங்கள் ஊர் வானிலையை அது தயாராக வைத்திருக்கும். இங்கு குக்கீ பதிவு செய்துகொண்டது இந்த பிரவுசரைப் பயன்படுத்தும் ராமசாமி அண்ணன் இந்த ஊரைச் சார்ந்தவர் என்கிற சிறிய தகவலைத்தான். இது வானிலைத் தளத்தின் - முதல் தரப்பு குக்கீ- (First-Party Cookie).

இதுவே அந்த வானிலைத் தளம் அதன் விளம்பரதாரருக்காக - மூன்றாம் தரப்பு குக்கீகளை (Third Party Cookie) அனுமதித்திருந்தால், - ராமசாமி அண்ணா குடை வாங்குங்கள் இன்றே கடைசி - போன்ற விளம்பரங்கள் உங்களை துரத்தத் தொடங்கும். நீங்கள் இணையத்தில் செய்வதை அமைதியாகக் கவனித்திருந்து அது தொடர்பான விளம்பரங்கள் உங்களை விடாமல் பின் தொடர்வதற்கான காரணம் சர்வ நிச்சயமாக இந்த குக்கீகள்தான்.



குக்கீகள் கொண்டிருக்கும் நமது முக்கிய தகவல்களைத்தான் ஹேக்கர்கள் திருடி பயனர்போலவே அந்தக் கணக்கில் நுழைந்து அதை நிர்வகிக்கிறார்கள். சரி! எப்படி நமது பிரவுசரில் இருக்கும் குக்கீகள் ஹேக்கர்கள் வசம் செல்கிறது. "எங்களது தயாரிப்பு இது! இலவசமாகத் தரவிறக்கிக் கொள்ளுங்கள்" என்று அனுப்பப்பட்ட இணைப்பு ஒரு மோசடி இணைப்பு. அதைச் சொடுக்கியதும் குக்கீகளைத் திருடும் தீங்குநிரலைத் தரவிறக்கிவிடும். ஒரு நம்பகமான மென்பொருளைப் போலவே இருக்கும் அதை இயக்கியதும் பயனரின் பிரவுசரில் இருக்கும் குக்கிகளைத் திருடி ஹேக்கர் வசம் ஒப்படைத்துவிடும்.

அதிலும் அமர்வு குக்கீ (Session Cookie) கிடைத்துவிட்டால், ஹேக்கர்களுக்கு அடித்தது அதிர்ஷ்டம்! ஒரு பயனர் வெற்றிகரமாகக் கணக்கில் நுழைந்ததும் அந்த அமர்வை நிர்வகிப்பதுதான் இதன் வேலை. இது கிடைத்துவிட்டால் பயனர் பெயர், கடவுச்சொல் எல்லாம் தேவையே இல்லை, நேரடியாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுவிடும். அலாவுதீன் விளக்கே கிடைத்ததற்கு பிறகு அலிபாபா குகைக்கு கடவுச்சொல் எதற்கு.

யூடியூப் போன்ற ஜாம்பவான்கள் பயனர் கணக்கில் நுழைவதற்கு கடவுச்சொல், ஒடிபி எனப் பல கட்ட பாதுகாப்புகளைக் (Multi Factor Authentication) கொண்டிருந்தாலும், அதையெல்லாம் கடந்து ஹேக்கர்கள் எளிமையாக கணக்கைத் திருடுவது இந்த அமர்வு குக்கீயால்தான்.

சரி! ஏன் பத்துக்கும் மேற்பட்ட சேனல்களை ஒரே நேரத்தில் அவர்கள் வசம் கொண்டுவருகிறார்கள். அதன் பிறகு ஏன் சேனல் பெயர், ஒளிப்படம் என அனைத்தையும் க்ரிப்டோ தொடர்பாக மாற்றி க்ரிப்டோ பணம் குறித்த காணொலிகளை அவர்கள் ஒளிபரப்புகிறார்கள்?

ஒரு ஹேக்கர் வசம் சேனல் வந்தால் அதை வைத்துக்கொண்டு அவர் உரிமையாளரை மிரட்டிதான் பணம் பறிக்க முடியும், அது நேரம் பிடிக்கும், ரிஸ்க்கும் அதிகம். பேரம் சரிவரவில்லையென்றால் சேனலை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. அதிகபட்சம் காணொலிகளை அழித்து மிரட்டுவார்கள். அதிலும் வருவாய் வராது. என்ன செய்யலாம்?

ஹேக் ஃபார் ஹைர்' (Hack for Hire) என இருள் இணையத்தில் ஒரு பதம் இருக்கிறது. இவர்கள் வாடகை ஹேக்கர்கள். இவர்கள் ஹேக் செய்து வைத்திருக்கும் கணினி, மென்பொருள்கள், வங்கி விவரங்கள், யூடியூப் சேனல் கணக்குகள், இன்னபிறவற்றை ஒரு மணிநேரத்துக்கு இவ்வளவு கட்டணம் என வாடகைக்கு விடுவார்கள். எத்தனை கணக்குகள் வேண்டுமானாலும் ஹேக் செய்யலாம். களத்தில் இறங்கி பணம் கேட்டு மிரட்டத் தேவை இல்லை. வாடகைக்கு விட்டால்போதும், பணம் கொட்டும்!

இந்த ஹேக்கர்களிடமிருந்து சேனல்களை வாடகைக்குப் பெறும்

**குக்கீகள் கொண்டிருக்கும் நமது முக்கிய தகவல்களைத்தான் ஹேக்கர்கள் திருடி பயனர்போலவே அந்தக் கணக்கில் நுழைந்து அதை நிர்வகிக்கிறார்கள்.**

07

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல் வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இவ்வாரச் சொல்

## "நசுக்கிடாமல்"

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் 'நசுக்கிடாமல் செய்வது' என்றொரு சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொல் வினைச்சொல் வடிவமாகவே பாவனையிலுண்டு. ஒரு விடயத்தைச் செய்யும்போது அயலவர்களுக்கோ உற்றார் உறவினர்களுக்கோ தெரிந்துவிடாதபடி மிக இரகசியமாகச் செய்து முடிப்பதையே 'நசுக்கிடாமல் செய்வது' என்ற வினைச் சொல் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

திருமணமாகாத பெண் ஒருத்தி கர்ப்பமாகி மிக இரகசியமாக அந்தக் குழந்தையை வீட்டிலேயே பெற்றெடுத்துப் பின் வெளியே எங்காவது அதை அனுப்பி விட்டால், "அவள் நசுக்கிடாமல் பிள்ளை பெத்துப்போட்டாள்" என்பர். இதைவிட "அவன்ர பொட்டை நசுக்கிடாமல் ஒரு பெடியனோட ஓடிப்போட்டாள், அவன்ர மகள் நசுக்கிடாமல் கனடாவுக்குப் போய்ச் சேந்துபோட்டாள். அந்த வீட்டுக்குள் இயக்கம் நசுக்கிடாமல் இருந்திருக்கிறாங்கள். தாக்குதல் நடந்த பிறகு தான் எங்களுக்குத் தெரியும், அவங்கள் எல்லவாற்றையும் நசுக்கிடாமலுக்குச் செய்து முடிப்பாங்கள், அவங்கள் நசுக்கிடாமலுக்கு அந்தக் காணியை வாங்கிப் போட்டாங்கள்" என்றெல்லாம் பலவாறு பேசுவார்கள். பலர் பருவத்தினர் தமக்குள் நுள்ளிக்கொள்வது, ஒருவருக்கொருவர் அடிபடு வதிலும் இவ்வாறு சொல்வார்கள். "அவன் நசுக்கிடாமல் நுள்ளிப்போட்டான். கதைச்சுக் கொண்டு இருந்துபோட்டு நசுக்கிடாமலுக்கு அடிச்சுப்போட்டான்" என்றெல்லாம் கதைப்பதுண்டு. ஆக, மற்றவர்களுக்குத் தெரிய ஒரு விடயம் நடந்து முடிந்த பின்னர் மற்றவர்களுக்குத் தெதரியவரும்போது நசுக்கிடாமல் என்ற சொல் வினையாகப் பயன்படுத்தப்படுகிறது.

க்ரிப்டோ மோசடி யாளர்கள் அதன் அனைத்து சந்தாதாரர்களிடத்தும் - ஒன்று அனுப்பினால் இரண்டு - என க்ரிப்டோ கரன்சி மோசடியைக் கட்ட விழ்ப்பார்கள். அதற்காகத்தான் அந்த சேனலின் பெயர், ஒளிப்படம் எல்லாவற்றையும் க்ரிப்டோ பணம் தொடர்பாக மாற்றி விடுவார்கள்.

அது அப்படி அதிக சந்தாதாரர்களைக் கொண்ட இவ்வளவு சேனல்களை ஒரே நேரத்தில் ஹேக்கர்கள் தங்கள் வசம் கொண்டு வருகிறார்கள்?


இது மிக எளிது. இந்த முன்னணி சேனல்களின் விளம்பரம் மற்றும் முன்னேற்றத்திற்கு உழைக்கும் பின்னணி டிஜிட்டல் நிறுவனம் ஒன்றே, அவர்களது அமர்வு குக்கீயை வசப்படுத்தினால்போதும் பத்து சேனல்களின் குடுமியும் ஹேக்கர் வசம் சென்று விடும். அதை அவர்கள் க்ரிப்டோ கும்பலிடம் வாடகைக்கு விட்டு பணம் பார்ப்பார்கள்.

**இந்த தாக்குதலுக்கு ஆளாகாமல் சேனலைக் காப்பது எப்படி?**

விளம்பர வருவாய் தவிர்க்க முடியாதது, அதற் காக மின்னஞ்சலில் வரும் அனைத்தையும் தரவிறக்கு வதைத் தவிருங்கள். எக்ஸ்இ (exe) கோப்புகளை அறவே தவிருங்கள். தர விறக்கும் எந்த மென்பொ ருளை இயக்கும் முன்பும் அது நம்பகமானதா என ஸ்கேன் செய்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

கூகுளில் 'சேஃப் பிரவுஸிங்' (safe browsing) தேர்வுசெய்து கொள்ளுங்கள், இணைப்புகளைச் சொடுக்கினால் மோசடி தளங்களுக்கு இட்டுச்செல்வதை இது தவிர்க்கும். ஒருவேளை உங்களது சேனல் ஹேக் செய்யப்பட்டு விட்டால் கூகுள் அல்காரிதம், அதைத் தானே உணரும் தன்மை கொண்டது. சில மணி நேரங்களில் மீண்டும் உங்கள் வசம் தந்துவிடும். இல்லையெனில் நீங்களும் கூகுளிடம் முறையிடலாம்.

# இளமையில் வழுக்கை ஏன்?



கணேசன்

சங்க காலத்தில் ஆண்மையின் அடையாளமாகவும், பெண்மையின் அழகு என்றும் பார்க்கப்பட்ட தலைமுடி, இன்றைக்கு இளம் வயதினரின் உளவியல் சிக்கலுக்கும், உறவுச் சிக்கலுக்கும் உள்ளாகி, வாழ்க்கைப் பிரச்சினையாக உருமாறியிருக்கிறது. என்ன காரணம்? இளமையில் வழுக்கை!

ஒருவருக்குத் தினமும் சராசரியாக 100 முடிகள் உதிர்வது இயற்கை. அதற்கு மேல் முடி உதிருமானால் மருத்துவ ஆலோசனை தேவை. ஒரு செடி வளர்வது போல் முடியானது தொடர்ச்சியாக வளர்வதில்லை. வளரும் பருவம், உதிரும் பருவம், ஓய்வுப் பருவம் என முடியின் வளர்ச்சி 3 பருவங்களைக் கொண்டது. தலைமுடி ஒவ்வொன்றும் ஒரு பருவத்தில் இருக்கும்.

வளரும் பருவத்தில் அதிக முடிகள் இருந்தால் முடி வளர்ந்துகொண்டே இருக்கும். உதிரும் பருவத்தில் அதிக முடிகள் இருந்தால் முடி கொட்டும்; வழுக்கை விழும். முன்பு இதைத் தீர்மானிப்பது பரம்பரையில் வரும் மரபணுக்களாக இருந்தன; இப்போது நம் வாழ்வியல் தவறுகள்தான் முன்னிலையில் இருக்கின்றன.

**முடியைக் கெடுக்கும் மன அழுத்தம்**

இன்றைய இளைய வயதினரின் மிக முக்கிய 10 பிரச்சினைகளில் ஒன்று மன அழுத்தம். கல்விச்சூழல், பணிச்சூழல், குடும்பச்சூழல், உறவுச்சூழல் எனப் பல காரணங்களால் இவர்களுக்கு மன அழுத்தம் பதின்பருவத்திலேயே நெருப்பாகப் பற்றிக்கொள்கிறது. இது சருமத்தில் முடி முளைக்கிற பருவத்தை "எரித்து" விடுகிறது. இதனால் தலைமுடி உதிரும் பருவம் முந்திக் கொள்கிறது. இளமையில் வழுக்கை இப்படித்தான் தொடங்குகிறது.

"ஓபீஸ் ஸ்ட்ரெஸ்" எனப்படும் அலுவலக மன அழுத்தம் - ஆக்ஸிடேட்டிவ் ஸ்ட்ரெஸ் - (Oxidative stress) எனும் உடலியல் பிரச்சினையைத் தூண்டுகிறது. இது தலைமுடிக்குத் தலையாய எதிரி. வழுக்கையை அள்ளித் தரும் வள்ளல்.

அத்தோடு, புகைக்கும் பழக்கமும் இருந்தால், அந்தப் புகையின் நச்சு முடியின் வேருக்கு ரத்தம் போவதைக் குறைக்கிறது. அருந்தும் மது முடி வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை உறிஞ்சவிடாமல் தடுக்கிறது. அதனால்தான் பலருக் குச் சின்ன வயதிலேயே வழுக்கை விழுகிறது. புகை, மது, மன அழுத்தம் இந்த மூன்றையும் விட்டொழித்தால் தான் மீண்டும் தலைமுடி தளிர்க்கும். இந்த உண்மை எத்தனை பேருக்குத் தெரியும்?

**ஷாம்பு எனும் வில்லன்!**

இன்றைய நாகரிக உலகில் நீளமான, அடர்த்தியான, பொலிவான கூந்தல் வேண்டும் என்று ஆசைப்படாத பெண்கள் இல்லை! இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை கருமையான கூந்தலுக்குக் கரிசலாங்கண்ணிச் சாறு, சிகைக்காய், காய்ந்த செம்பருத்திப் பூ என்று இயற்கையான பொருட்களையே பயன்படுத்துவார்கள். தற்போதைய அவசர யுகத்தில் இவற்றையெல்லாம் தேட பெண்களுக்கு நேரம் ஏது?

தலைமுடிக்கான தேடல் சூப்பர் மார்க்கெட் தட்டுக்களில் முடிந்துவிடுகிறது. அங்கே குன்றுபோல் குவிந்திருக்கும் ஷாம்பு / கண்டிஷனர்கள்தான் இவர்களுக்கு முடி காக்கும் தோழிகள். உண்மையில், இவை இரண்டுமே தலைமுடிக்கு ஆகாத வில்லன்கள். இது தெரியாமல், இவற்றைக் குளியலறையில் அடுக்கிக்கொள்வதும் பயன்படுத்துவதும் எரிகிற கொள்ளியால் சொரிகிற சோகம்.

டிடர்ஜன்ட், எண்ணெய், புரதம் எனப் பலவற்றைக் கலந்து தயாரிக்கும் திரவ நிலை சோப்புதான் ஷாம்பு. கண்ணைக் கவரும் நிறத்துக்காகவும், வசீகர மணத்துக்காகவும், நுரைதள்ளும் குணத்துக்காகவும் வீரிய மிக்க வேதிப் பொருள்களையும் "அறம் பார்க்காமல்" சில நிறுவனங்கள் கலந்து விற்கின்றன. இவற்றில் காணப்படும் வேதிக்கலப்புகள் முடி உதிர்வதை மட்டுமல்ல பல்வேறு புற்றுநோய்களையும் அழைத்துவரும் எம தூதுவர்கள் என்பதைப் பயனாளிகளும் புரிந்து

கொள்வதில்லை.

அடுத்து, ஆளுக்கு ஆள் தலைமுடியின் தன்மை மாறும். அதுபோல் ஒவ்வொரு வகைத் தலைமுடிக்கும் ஒவ்வொரு வகை ஷாம்பு இருக்கிறது. எனவே, அவரவர் தலைமுடியின் தன்மையை முதலில் தெரிந்திருக்க வேண்டும். ஷாம்பு நம் தலையில் உள்ள அழுக்கு, தூசு, எண்ணெய்ப் பிசுக்கு ஆகியவற்றை அகற்றுகிறது. ஹேர் கண்டிஷனர் தலைமுடிக்கு ஈரப்பதம் கொடுத்து மினுமினுப்பு ஆக்குகிறது. இதிலும் பலவிதம் உண்டு. அவரவர் முடிக்குப் பொருத்தமாகத்தான் தேர்வு செய்ய வேண்டும். எத்தனை பேருக்குத் தெரியும் இந்த அறிவியல் விதிகள்?

மக்களின் இந்த அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் சந்தையில் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கின்றன. இவற்றின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு இல்லாத சாமானிய மனிதன் நோயாளி ஆவதுதான் நவீன வாழ்வியல் கொடுத்திருக்கும் சாபம்!



**நடுவீட்டு நாட்டாமை!**

தலைசீவும்போது வழக்கத்தைவிட அதிகமாக ஒன்றிரண்டு முடிகள் சீப்பில் ஒட்டிக்கொண்டு வந்துவிட்டால் போதும், பல்லி விழுந்தப் பாலைக் குடித்தமாதிரி இளம் பெண்கள் பதறிப்போவார்கள். உடனே சோப்புதான் காரணமா, ஷாம்புவை மாற்றலாமா, மூலிகைத் தைலம் தேய்க்கலாமா என்கிற ரீதியில் "உலக நடப்பை" அம்மாவிடமும் தோழிகளிடமும் அலசி ஆராயத் தொடங்குவார்கள். ஆனால், பெரும்பாலான பெண்களுக்கு இலவசமாக வழிகாட்டுவது நடுவீட்டில் அமர்ந்துகொண்டு நாட்டாமை செய்யும் திருவாளர் தொலைக்காட்சிதான்.

அரை மணிக்கொரு தடவை "இதில் புரோட்டீன் இருக்கிறது" "முட்டை கலந்திருக்கிறது" "அதிக போஷாக்கு தருகிறது" "ஹெர்பலில் தயாரித்தது" என்றெல்லாம் வெள்ளைக்கோட்டு அணிந்த விளம்பர மருத்துவர்கள் வாய்கூசாமல் பொய் சொல்வார்கள்; கூந்தல் வளர்ச்சிக்குச் சாட்சியாக கிராபிக்ஸில் அசத்தும் அனிமேஷன் காட்சிகளைக் காட்டுவார்கள் "ஒன்றுக்கு ஒன்று இலவசம்" என ஆசை காட்டுவார்கள். அவற்றில் மயங்கும் மங்கையர்கள் அந்த ஊடகம் சொன்ன சோப்பு /ஷாம்பு / தைலத்தை நதி மூலம் ரிஷி மூலம் பார்க்காமல் வாங்கித் தலையில் தேய்த்துக்கொள்வார்கள். ஆனால், நிஜத்தில் அநேகம் பேருக்கு அதற்குப் பிறகுதான் மொத்த முடியும் கொட்டத் தொடங்கி திகில் ஏற்படுத்தும். அப்போது படியேறி வரும் பாம்பைப் பார்த்து பயந்தமாதிரி அலறியடித்து மருத்துவரிடம் ஓடுவார்கள்.

முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். தலையில் தேய்க்கும் திரவக்குழம்பில் இயற்கை புரோட்டீனே இருந்தாலும் சரி முடியில் அவை துளியும் உறிஞ்சப் போவதில்லை. எனவே, விளம்பரங்களை நம்பி ஏமாறாதீர்கள். இருக்கிற முடியையும் இழந்துவிடாதீர்கள்.

**முடி உதிரக் காரணம்!**

முடி கொட்டுவதைக் கட்டுப்படுத்தத் தைலத்தைத் தேடி அலைவதற்கு முன்னால், அதற்குரிய காரணத்தைத் தேட வேண்டியது முக்கியம். சீவும் சீப்பில் தொடங்கி உடலைத் தாக்கும் நோய்கள் வரை அநேகக் காரணிகள் அதற்கு உண்டு. ஆளுக்கு ஆள் அந்தக் காரணி மாறும். அக்காவுக்கு பிளாஸ்டிக் சீப்பு பிரச்சினை செய்கிறது என்றால், தங்கைக்கு ஹேர் டிரையர்தான் தலைமுடிக்குச் -சூடு- போடும். அம்மாவுக்குத் தரம் குறைந்த தலைச் சாயம் எதிரியாக இருக்கும். அத்தைக்கு முடியை இறுக்கமாகக் கட்டுவது காரணம் எனில், சித்திக்கு ஈரத்துடன் தலை வாருவது காரணமாக இருக்கும். சித்தப்பாவுக்கு அடிக்கடி சோப்பு / ஷாம்பு மாற்றும் பழக்கம் இருக்கும். அதுதான் அவருக்குத் தலைமுடி உதிரக் காரணமாக இருக்கும். பாப்பாவுக்கு முடி கொட்ட அவளை அறியாமலேயே முடியைப் பிடுங்கும் பழக்கம் ஒரு காரணமாக இருக்கலாம். தலையில் ஈறு, பேன், பொடுகு, படைகள் இருந்தாலும் இதே நிலைமைதான்.

பெண்களுக்கு நீண்ட கூந்தலை அள்ளிக் கொடுத்து அழகூட்டுவது ஹார்மோன் கெமிஸ்ட்ரி. அதேநேரத்தில், சில பெண்களுக்குத் தலையில் சொட்டை விழவைத்து அசிங்கப்படுத்துவதும் அதே கெமிஸ்ட்ரி செய்யும் அட்டகாசம்தான் என்பதையும் இங்கே சொல்லிவிடுகிறேன்.

ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டிரோன் என்னும் இரண்டு ஹார்மோன்கள் பெண்கள் வயதுக்கு வரும்போது, மாதச் சுழற்சியின்போது, கருத்தரிக்கும்போது, பிரசவத்தின்போது, மாதவிலக்கு நிற்கும்போது என வாழ்வின் பல பருவங்களில் இசைக்கு நடனமாடும் நீரூற்றுக்கள்போல தங்கள் சுரப்பை இஷ்டத்துக்கு கூட்டிக் குறைத்து வேடிக்கை காட்டும். அப்போதெல்லாம் அவர்களுக்குத் தலைமுடி உதிரும்.

**மூட்டுவலி, மன அழுத்தம், இதய நோய் என சில நோய்களுக்குச் சாப்பிடப்படும் மருந்துகளும் தலைமுடி உதிர்வதைத் தூண்டும்.**



# தமிழர் மத்தியில் ஏனிப்படிச் சீரழிவுகள்...?

**நாகராசா**

இந்த வாரம் வடக்கு மாகாணத்தில் நடந்த பல சம்பவங்கள் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதைக் காட்டுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் அறைக்குள் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி உயிரை மாய்க்க முயன்றிருக்கிறார் பொருளியல்துறைப் பேராசிரியர் ஒருவர். தனக்குத் துறைத் தலைவர் பதவியைத் தராவிட்டால் உங்கள் முன்னிலையிலேயே எரிந்து சாம்பலாகுவேன் என்ற துணைவேந்தரைத் தனது வில்லத்தனத்தால் வெருட்டியும் இருக்கிறார். வவுனியாவில் குடும்பத் தலைவர் ஒருவர் குரூரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். புதுக்குடியிருப்பில் இருந்து 17 வயதுச் சிறுமிகள் இருவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து 5 பேர் சேர்ந்து பாலியல் முறைகேட்டில் ஈடுபடுத்தினர். எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தில் அயலூரான திருநெல்வேலியில் 34 வயதுடைய பூசகர் ஒருவர் ஊசி மூலம் ஹெரொய்ன் போதையை உடலுக்குள் செலுத்தி இறந்திருக்கிறார்.

இவையெல்லாம் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறுபட்ட படிநிலைகளில் நடந்தேறியுள்ளன. பாலியல் கையூட்டு, பாலியல் வன்புணர்வு என்பன மேற்கண்ட அநேகமான சம்பவங்களில் இழையோடியிருப்பது தெரிகிறது. இவற்றுக்குப் போதைப் பொருள் பாவனையும், அதிதிறன்பேசிகளும் அதிக பங்களிப்புச் செய்திருக்கின்றன. அதி திறன் பேசிகளை வைத்திருப்பவர்களில் பலர் தமது சொந்த உழைப்பில் அவற்றை வாங்கவில்லை என்பதும் மறுகதை.

தமிழ்ச் சமூகம் போதனையற்ற ஒரு சமூகமாக இருப்பதால்தான் இவையெல்லாமும் மிக இலகுவாகச் சமூகத்தில் ஊடுருவியிருக்கின்றன. படித்த தமிழர் மத்தியில் இவ்வளவு அநியாயங்களும் நடந்தேறியிருக்கின்றன. இவற்றை இலகுவில் கடந்து விடவும் முடியாது.

தமிழ் அரசியல் தலைவர்கள் தேர்தலில் வென்ற பின்னர் மக்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை. இது தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமைகளின் பெறுமானமற்ற வகிபாகத்தையே காட்டுகிறது. தொடக்கத்தில் குறிப்பிட்ட பல்வேறு சமூகப் பிரச்சினைகளில் இந்தத் தலைவர்கள் கட்டுப்படுத்துவதற்கு எந்த முயற்சிகளும் எடுப்பதில்லை.

சமயத் தலைவர்களே போதை பாவிக்கும் அளவுக்கு நிலமை மோசமாகியிருக்கிறது. கந்தபுராணக் கலாசாரப் பூமி இப்போது கஞ்சாக் கலாசார பூமியாக மாறியிருக்கிறது சாதாரண மக்கள் உணவுக்காக ஏங்கும் நிலை இருக்கையில் யாழ்ப்பாணம் - நாச்சிமார் கோவிலடியில் தனது பூப்புனித நீராட்டு விழா என்ற பெயரில் குதிரை வண்டி, யானை, கதகளி நடனம் என ஏகப்பட்ட அந்நிய விடயங்களை ஒருவர் காங்கேசன்துறை வீதியில் நடத்தியிருந்

---

இன்றைய நவீன வாழ்வியலில் பலருக்கும் நம் பாரம்பரிய உணவு முறை மறந்துவிட்டது. முடி வளர்ச்சிக்குத் தேவைப்படும் சத்தான உணவுகளைச் சாப்பிடுவது குறைந்துவிட்டது. அந்நிய நாட்டின் சக்கை உணவுக ளைச் சாப்பிடுவது நாகரிகமாகி விட்டது. இதனால் பலருக்குப் புரதம் குறைந்தும், குருதிச்சோகை பிறந்தும் தலைமுடி உதிர்வது வாடிக்கையாகி விட்டது. அத்தோடு தைராய்டு சுரப்பி பிரச்சினை செய்வதும், சினைப்பையில் நீர்க்கட்டிகள் பிறப்பெடுப்பதும் இந்தப் பிரச்சினைக்குத் தூபம் போடுவதை நடைமுறையில் காண்கிறோம்.

அடுத்து, டைபாய்டு, மஞ்சள் காமாலை, அம்மை, காசநோய், புற்று நோய் எனச் சில நோய்கள் தாக்கும் போது தற்காலிகமாகத் தலைமுடி உதிரும். மூட்டுவலி, மன அழுத்தம், இதய நோய் என சில நோய்களுக்குச் சாப்பிடப்படும் மருந்துகளும் தலைமுடி உதிர்வதைத் தூண்டும்.

இவை தவிர, ஸ்கேன் கருவிகள் தேவையில்லாமல் துப்பித்தொலைக்கும் எக்ஸ் கதிர்கள், புற்றுநோய்க்குத் தரப்படும் கதிர்வீச்சுச் சிகிச்சைகள், அணு உலைகள் அவிழ்த்துவிடும் அணுக்கதிர் வீச்சுகள் எனத் தலைமுடியை உதிரவைக்கும் காரணிகள் சிவகாசிச் சரவெடிபோல் நீளும். காரணம் தெரிந்து சிகிச்சை பெற்றால், முடி உதிரும் பிரச்சினையும் முடிவுக்கு வரும்.

தார். இதுவும் தமிழ்ச் சமூகம் தமது பண்பாட்டு விழுமியங்களை இழந்து விட்டதையே காட்டுகிறது.

**கொரோனாக் கால போதைப் பாவனை**

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் 10 பேருக்கு மேல் ஊசி மூலம் போதையை உடலுக்குள் செலுத்தியதால் சாவடைந்திருக்கி றார்கள். இவை சம்பவித்த இடங்கள் போதைப் பொருள் வியாபாரம் நடக் கும் மையங்களாக உள்ளன. கொரோ னாத் தொற்றுக் காலத்தில் மதுபான சாலைகள் மூடப்பட்டிருந்ததால் போதைக்கான மாற்று வழிகளை மதுப்பிரியர்கள் தேடினார்கள். இதன் விளைவாகச் சந்தையில் கூலித் தொழில் செய்பவர்கள், முச்சக்கர வண்டி, பேருந்துச் சாரதிகள், நடத்துனர்கள், கோவில் சார்ந்த பணிகளை மேற் கொள்வோர், மீன்பிடி, விவசாய முயற்சிகளில் ஈடுபடுவோர் எனக் கூட்டமாக அல்லது குழுக்களாகத் தொழில் ரீதியாக இணைந்து பணி யாற்றும் பலர் இதில் இறங்கியிருக்கின் றனர்.

வழமையாக மது அருந்துபவர்களா கக் காணப்பட்ட இவர்களே போதைப் பொருள் பாவனைக்குத் தள்ளப்பட்டி ருக்கின்றனர். மிகவும் இரகசியமாக நடப்பதால் சாதாரண மக்கள் கண் டறிவது சிரமம். இவ்வாறானவர்களில் யாராவது இறந்தால் மாத்திரமே இறப்புக்கான காரணத்தைத் தேடும் போது "இவன் இவ்வளவு நாளும் இதைத்தான் பாவித்திருக்கிறான்" என இறந்தவர்களின் வீட்டவர்கள் கூறுமளவுக்கு நிலமை இருக்கிறது.

1970களின் பிற்பகுதியில் நித்தி கனகரட்ணம் என்ற பொப் இசைப் பாடகர், "கள்ளுக் கடைப் பக்கம் போகாதே" என்றொரு பாடலைப் பாடினார். அந்தப் பாடலில் கள்ளுக் குடித்தால் "கண்ட கண்ட பழக்கம் எல்லாம் பழக்கிடும் கடைசியில் கட் டையில கொண்டுபோய்ச் சேர்த்தி டும்" எனக் கள்ளுக் குடிப்பதையே தவறான நடத்தையாகப் பார்த்த தமிழ்ச் சமூகம் தற்போது போதைப் பொருள்களுக்கு மிகச் சாதாரணமாக அடிமைப்பட்டிருக்கிறது.



முறைகேடுகள், பாலியல் முறை கேடுகள், போதைப் பாவனை, விற் பனை ஆகிய பல சமூகவிரோதச் செயல் களுக்குப் புலிகள் சாவுத் தண்டனை அளித்தார்கள். அதில் அரச அதிபர், விரிவுரையாளர், வர்த்தகர்கள், பூச கர்கள், விவசாயிகள், மீனவர்கள் எனப் பலரும் தண்டிக்கப்பட்டனர். புலிகள் இல்லாதுபோன 13 ஆண்டு களில் அவர்கள் தடை விதித்த அனைத்து விடயங்களும் தமிழர் மத்தியில் படித்தவர்கள் - படிக்காத வர்கள் என்ற வேறுபாடின்றி மலிந்து விட்டன.

---

# கியூ-ஆரின் வெற்றி...!



எரிபொருள் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு அரசால் கையிலெடுக்கப்பட்ட கியூ.ஆர். எனப்படும் விரைந்து எதிர்வினையாற்றும் தொழில்நுட்பக் கண்டு பிடிப்பு எதிர்பார்த்த பயனை அளித்திருக்கிறது என்று மெய்ச்சப்படுகிறது. எரிபொருள் பற்றாக்குறை, எரி பொருள் போதாமையும் இருந்தாலும் அது பகிர்ந்தளிக் கப்படும் விதத்தில் நிறைவுத் தன்மை எட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். முன்பைப்போல எரிபொருள் இறக்குமதி இருக்கிறதா என்று நோக்கினால், பதில் இல்லை என்றே கிடைக்கிறது. எரிபொருள் இறக்குமதியில் இன் னமும் திருப்தி ஏற்படாத நிலையில் கியூ.ஆர். முறைமை காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நெருக்கீடுகளுக்கு உள்ளாவது தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதே இதன் பின்னாலுள்ள உண்மை. இதன் பின்ன ணியில் பலருக்கு நன்மையையும் பலருக்குத் தீமையை யும் ஏற்பட்டிருக்கிறது.

**பெறவேண்டிய கட்டாயம்**

கியூ.ஆர். குறியீடுகளைப் பயன்படுத்தி ஒதுக்கப்பட்ட அளவில் அவரவர் எரிபொருளைப் பெறுகின்றனர். வாரம் தோறும் எரிபொருள் தேவையற்ற நிலையில் இருந்த பலர் - அல்லது வாரா வாரம் குறிப்பிட்டளவில் எரிபொருளைப் பயன்படுத்திய பலரும் தமக்கு ஒதுக் கப்பட்ட எரிபொருளைக் கட்டாயம் பெற்றாக வேண்டிய நிலையை ஆரம்பத்தில் இந்த எரிபொருள் நெருக்கடி ஏற்படுத்தியது. இதனால் அவ்வப்போது எரிபொருள்

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

72

சூழலைக் கையாள்தல் என்பதில் சாதகத்தை மட்டும் கவனத்திற் கொண்டு முன்னகர்கையிலேற்படும் தடங்கல்கள் முடக்கத்தையே ஏற்படுத்திவிடும். ஆனால் தடங் கலை எதிர்பார்த்துப் போகும்போது அதுவே ஒரு வழியாக அமைந்துவிடும். பாதகமென்று எண்ணிக்கொண்டு துவண்டு விடுவதைத் தவிர்க்கும் அதேவேளை அதற்கான காரணங்களைச் சரிவரக் கண்டு கடக்கும் வலுவை மனதில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். சூழலைக் கையாள்தல் என்பது மட்டும் போதுமா இலக்கையடைய?

நிச்சயமாக இல்லை. சூழலை மதிப்பிடுவதும் கையாள்வதும் போலவே சந்தர்ப்பத்தையும் சரிவரக் கையாளவேண்டியது அவசியமானது என்பதைக் கவனத்தில் வைத்திருக்கவேண்டும். அது என்ன சந்தர்ப்பம் என்று கேட்கமுடியும். சூழலினது செல்வாக்குப் போலவே சந்தர்ப்பமும் எமது செயல்களில் செல்வாக்குச் செலுத்துகிறது. எமது செயலொழுங்கை மாற்றியமைக்கக் கூடியது. கவனத்துடன் அணுகவேண்டியது.

நாம் எதனைச் செய்யப்போகிறோம் என்பதில் அச்செயல் இடம்பெறவேண்டிய காலம் மிகமுக்கியமானது. மழை மற்றும் குளிர்காலங்களில் குளிராடைகளை விற்கலாம். குளிர்பானம் அல்லது குளிர்களி விற்கமுடியுமா? இது வெறுமனே ஒற்றை எடுத்துக்காட்டுத்தான். இவ்வாறான பல முயற்சிகளுக்கு காலப்பொருத்தமென்பது அவசியமானது. அதனைக் கவனிக்காது கிரகப்பிழை, சகுனப்பிழை அது இதுவென்று பரிகாரம் தேடுவதில் பயனில்லை. பிழை எமது காலத்தைத் தெரிவு செய்வதிலேயே இருக்கிறதென்பதை உணரத் தவறுவதிலேயே உள்ளது.

தேர்வு செய்வதில் தவறிழைப்பது நாமாக இருக்க காரணங்களை வெளியே தேடுகிறோம் என்பதே உண்மையானது. இது எமது பருவங்கள் மற்றும் பிற காலத்துடனிசைந்த செயல்களிற்கு அத்தியாவசியமானது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்", "பருவத்தே பயிர் செய்" போன்ற வாக்குகளை மனனம் செய்து பரீட்சைகளுக்கு ஒப்புவித்ததோடு சரி. அவைதான் சந்தர்ப்பம் என்பதை உணரத் தவறிவிடுகிறோம். அவ்வளவுதான்.



நாம் காலம் என்பதை நல்ல காலம் கெட்ட காலம் என்பதற்கப்பால் அறிந்துகொள்ளத் தவறியவர்களாகவே உள்ளோம். சந்தர்ப்பம் என்பது சமூக அவதானத்தின் வழியாக ஏற்படுத்தப்படலாம். இயற்கையாலும் உருவாகலாம். தொழிற்றுறையைப் பொறுத்தவரை இரண்டுமே செல்வாக்கு மிக்கவை. அரசியல் தலைமைத்துவப் பதவிகள்

தேவைப்படுவோரும் வாரா வாரம் எரிபொருளைப் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் எரிபொருள் நுகர்வு அதிகமானது. கியூ.ஆர். நடைமுறைக்கு வந்த தொடக்கத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குவிந்தவர்களை இப்போது காணக்கிடைப்பதில்லை. அதே வேளை வார ஒதுக்கீட்டைத் தாண்டியும் எரிபொருள் நுகர்வுத் தேவை அதிகமுள்ள பலருக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டது. கியூ.ஆர். முறைமைக்குப் பின்னர் பெருமளவான கள்ளச் சந்தைத் தரப்புகள் பின்னடைவைச் சந்தித்தாலும் நுகர்வுத் தேவை அதிகமுள்ளவர்கள், தேவை குறைந்தவர்களிடமும் கள்ளச் சந்தைத் தரப்பினரிடமும் எரிபொருளை வாங்கும் நிலை சிறிதேனும் இருக்கவே செய்கிறது. முன்புபோல அதிக விலைக்கு இல்லாவிடினும் இந்த எரிபொருள் மாபியாக்கள் முழுமையாக முடங்கிப்போகாத நிலையே இப்போதும் இருக்கிறது.

எரிபொருள் பற்றாக்குறை இன்னமும் இருந்தாலும் அதைப் பங்கிட்டுக் கொடுப்பதில் கியூ.ஆர். வெற்றி கண்டேயிருக்கிறது. இதனால் கள்ளச் சந்தை தவிர்க்கப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முகாமிட்டிருந்த சண்டியர்கள் துரத்தப்பட்டுள்ளனர். மட்டுமன்றி அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் கியூ.ஆர். குறைத்திருக்கிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூடி நின்று போராட்டங்கள், கலகங்களில் ஈடுபடத் தூண்டும் நிலையைக் கியூ.ஆர். தடுத்திருக்கிறது. எரிபொருள் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும் இயலுமான வரையில் பெரும்பாலானவர்களின் நெருக்கீட்டுக்குத் தீர்வு கண்டிருக்கிறது கியூ.ஆர். முறைமையை மீறி எரிபொருள் வழங்கலில் சட்டவிரோதச் செயல்கள் நடப்பதற்கு வாய்ப்புகளில்லாமல் இல்லை. ஆனாலும் இப்போதைக்குக் கியூ.ஆரின் பயனைப் பலரும் அனுபவிக்கிறார்கள் என்பதே உண்மை.

போன்றவை சமூக அவதானிப்பினூடாகவும் விவசாயம் போன்ற தொழில்கள் பருவத்தினூடாகவும் ஊடாடிப் பெறவேண்டியவை. வணிகத்துறையைப் பொறுத்தவரை இயற்கை என்பதற்கு மேலாக சமூக அவதானத்துடன் சந்தர்ப்பங்களை நாமாகவே உருவாக்க வேண்டியதாகவும் உள்ளது.

இங்கே நாம் சந்தர்ப்பம் என்பதை தானாகக் கனிந்து கைகளிற்குள் வந்து விழும் ஒரு பண்டமாகவே பாரக்கப் பழகியிருக்கிறோம். படிமுறைகளில்கூட சந்தர்ப்பங்கள் அடையப்படலாம் என்பதை கவனிக்கத் தவறிவிடுகிறோம். கல்வி, பதவியுயர்வுகள், வேலை வாய்ப்புகள் போன்ற விடயங்களில் நம்மில் அனேகர் அனேகமாக சந்தர்ப்பங்களைத் தவறவிடுபவர்களாகவே இருந்து வருகிறோம். படிநிலைகளாக கிடைக்கிற வாய்ப்புக்களைத் தூரத்தில் உள்ள இலக்கையடைய எத்தனை பேர் பயன்படுத்தியுள்ளோம்?

இலகுவாக குறித்த இலக்கையடைய பொருத்தமான சூழலையும் சந்தர்ப்பத்தையும் சரியாகக் கையாள முடியாது தடுமாறி குறுக்கு வழிகளை நாடுகிறோம். இலக்கையடைந்தாலும் நாம் அதனை அடைந்த வழி பற்றிய பயம் கூடவேயிருந்து குடைந்துகொண்டிருக்க நிம்மதி கிட்டுமா? திருப்திதான் கிட்டுமா? தூக்கமின்மையும் மனஉழைச்சலுமே கிட்டும் தாராளமாக. இதுவே எமது மன அமைதியைச் சிதைக்கவும் காரணமாகிவிடுகிறது.

சந்தர்ப்பம் என்பது அதிஸ்டம் என்கிற ஒரு விளக்கமும் எம்மிடையே உண்டு. அதிஸ்டம் என்பது உழைப்பின் மீது நம்பிக்கையற்றவர்களது சொத்து. அல்லது சோம்பேறிகளின் சொர்க்கம் (சொர்க்கம் என்பது உச்சமான கற்பனை என்பது நினைவிருக்கட்டும்) ஆக சோம்பேறிகளின் நம்பிக்கை. சந்தர்ப்பம் வேறு அதிஸ்டம் வேறு என்பதில் தெளிவு அவசியம் வேண்டும். சந்தர்ப்பங்கள் உள்ளவை. உருவாக்கப்படவும் கூடியவை.

எனவே கையாள்வது இலகுவானது. கையாள்வது என்பதை விட அதனைத் தெரிவுசெய்வதும் பயன்படுத்துவதுமே முக்கியமானது. அதனை எவ்வாறு செய்வது? சிந்திப்போம்.

# அட! இதுதானோ?

கதிரேசன் காத்தவராயன்



அண்டைக்கதிலை சுப்பிரமணியம்மாஸ்ரர் வீட்டிலையிருந்து அவரசமாய் வெளிக்கிட்டதிலை செருப்பை மறந்துபோய் விட்டிட்டு வந்தது நினைவு வர உடனையே திரும்பிப்போனன். என்னைக் கண்ட மாஸ்ரர் "என்னப்பா கதிரேசர் கதையைக் குறையிலை விடக்கூடாதெண்டோ?" எண்டு சிரிச்சுக் கொண்டே "இரும்.. இரும்" எண்டு என்னை இருக்கப்பண்ணிவிட்டார். நானும் இருந்துகொண்டன்.

பெடியளின்ரை கதை தங்கடை பள்ளிக்கூடங்களிலைதான் நிண்டுது. "மாதச் சோதினை என்னமாதிரிப் போகுது?" எண்டுது ஒராள். "ஓஓஓ! வலு மும்முரமாய் நடக்குது! கன காலத்துக்குப் பிறகு படிப்பிக்கலாமெண்டு வகுப்புக்குப் போறநேரமெல்லாம் ஏதோ ஒரு சோதினையோடைதான் இருக்குதுகள். சிலபசெண்டு யோசிக்கவே முடியுதில்லை" எண்டு ரண்டு பேர் முன்பாதியொராளாயும் பின்பாதியொராளாயும் முடிச்சினம்.

"என்ன சேகர் கடுமையாய் யோசிக்கிறாய்.. எனக்கிப்பிடி பிரச்சனையொண்டும் இல்லையோ?" எண்டு ஒராள் கேட்டதுக்கு அந்தச் சேகரெண்ட பெடி "ம்.. உம்.. அதேதான் நடக்குது.. ஆனால் மாதச் சோதினையெண்டும் சொல்லீனம்! மாகாணச் சோதினையெண்டும் சொல்லீனம்! அதுகளை எது எதுவெண்டு கண்டு பிடிக்கிறதே எனக்குப் பெரிய சோதினையாயல்லே கிடக்குது?" எண்டு முகத்தை ஒரு கோணலாக்கிச் சொல்ல எல்லாரும் பெரிசாச் சிரிச்சினம். நானும் ஒண்டும் விளங்காட்டியும் சிரிச்சன்.

"உதுகள் பிள்ளையள் தாங்கள் படிச்சதை மீட்டவும் வாத்திமார் தங்கடை பிள்ளையள் எங்கை நிக்கினமெண்டதை அறியவும் நல்லதுதான்" எண்டு மாஸ்ரர் முடிக்கயில்லை அந்த சேகரெண்ட பெடி "அது சரிதான் சேர்! ஆனால் எனக்கொரு டவுட் உதிலை கிடக்குது..." எண்டு இழத்துது. "என்ன டவுட்டோ? உனக்கெப்பவும் டவுட் தானே" எண்டொராள் சொல்ல "அவனுக்கு மட்டுமில்லை எனக்குந்தான். இழந்த கல்வி எண்டொரு கல்வி இருக்கல்லோ? அதுக்கும் இதுக்கும் ஏதாலும் சம்மந்தமிருக்குமோ எண்டது தான்" எண்டு சுதன் சொல்லிச்சுது.

"ஓஓஓ! உதோ! எக்ஸ்ரா கிளாஸ், ஈவினிங் கிளாஸ் எண்டெல்லாம் இருக்கல்லோ? அதுகளாலை கவறப் பண்ணலாமல்லே?" எண்டானொராள் சிரிச்சுக்கொண்டே. அதுக்குள்ளை



# திருச்சிற்றம்பலம்

## நல்ல அனுபவம்!

வாழ்க்கை ஒரு போராட்டம்தான். அதற்காக அது எப்போதுமே போரடிக்கும் பொது வெளியில்லை, அதன் நடுவே அப்பப்போ சுவாரஸியங்களையும் அள்ளி வழங்கக்கூடியதுதான் என்பதை யதார்த்ததுக்கு வெகு நெருக்கமாக நின்று வழங்கும் படைப்புத்தான் 'திருச்சிற்றம்பலம்'.

ரோலர்கோஸ்ட் வாழ்க்கையின் ஏதோ ஒரு நிறுத்தத்தில் உங்களுக்கான சர்ப்ரைஸ் நிகழ்ந்தே தீரும் என்பது சொல்கிறது படம்.

தந்தை நீலகண்டன் (பிரகாஷ்ராஜ்) மீதான கோபத்தினால் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் உணவு டெலிவரி பாயாக வேலையை செய்து வருகிறார் திருச்சிற்றம்பலம் (தனுஷ்). வீடு, வேலை என்ற அவரது வழக்கமான சுழலோட்டத்தில் சோகங்களையும், வலி களையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் உற்ற தோழி ஷோபானா (நித்யா மேனன்). இப்படியான திருச்சிற்றம்பலத்தின் வாழ்வில் சில, பல காதல்கள் குறுக்கிட, அவை கைகூடியதா இல்லையா? என்பது மட்டுமல்லாமல், வாழ்க்கை அவருக்கு கொடுத்த இன்னொரு சர்ப்ரைஸையும் சேர்த்து நல்ல அனுபவங்களையும் பொழுதுபோக்காக உருவாகியிருக்கும் படம்தான் 'திருச்சிற்றம்பலம்'.

'உத்தமபுத்திரன்' படத்தையடுத்து ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு தனுஷுடன் கைகோத்திருக்கிறார் இயக்குநர் மித்ரன் ஜவஹர். இம்முறை நேர்த்தியான கதைக்களத்துடன் களமிறங்கியிருக்கிறார். படத்தின் மிகப்பெரிய பலமே அதன் கதாபாத்திர தேர்வுகள்தான். நடிகர்கள் அனைவரும் அந்தந்த கேரக்டரில் பொருந்துவதோடு மட்டுமல்லாமல், கச்சிதமான நடிப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். அதில் சினிமாத்தனம் துருத்தாமல் இருப்பதுதான் பெரிய விடயம்.

தனுஷின் அலட்டிக்கொள்ளாத நடிப்பு, தனித்த உடல்மொழி, தந்தையை 'அவன்' என கூறி நடப்பது, தாத்தாவை நண்பனாக டீல் செய்வது, சென்டிமென்ட் காட்சிகளில் உதட்டை மட்டும் நடிக்க வைப்பது மிரட்டுகிறார்.

ஏதோ நக்கலான விசயம் இருக்கும் போலை. மாஸ்ரர் ஒரு சிரிப்புச் சிரிச்சார். ஏதாலுஞ்சொல்லு வாராக்குமெண்டு பாத்தால் பேசாமலுக்கு இருந்திட்டார்.

''பாடநேரப் படிப்பு, எக்ஸ்றா வகுப்பு, சோதினையள், ரியூசனுகள் எண்டு எல்லாப் பக்கத்தாலையும் ஒரே தலைக்குள்ளைதானே இடியிடியெண்டு இடிச்சுஅடையிறம். சைல்ட் சைக்கோலொஜி எண்டெல்லாம் விடிய விடியப் படிச்சு ரியூட்டுகளும் எழுதித் தள்ளினனாங்களல்லே? அது எழு துறதுக்கு மட்டுந்தானோ? பிறக்டிக்கலாய் அதுகின்ரை நிலைமை என்ன?'' எண்டுது ஒராள் எரிச்ச லோடை.

''அதுதானே? என்ன சாக்கே நேற்றையானையும் சேத்து இண்டைக்கு அடையிறதுக்கு? ஒரு நேரஞ் சாப்பிடாமலுக்கு அடுத்த நேரஞ் சேத்துச் சாப்பிடலாமோ?'' எண்டான் சேகரெண்ட அந்தப் பெடியன். ''அப்பிடித்தான் நிலைமை போகுது. பேந்து றிசல்ட் வந்த பிறகு ஐயோ ஆத்தே எண்டு கத்துறதுக்கு விசயம் வேணுமல்லே?'' எண்டான் சுதன்.

''இதுக்குள்ளை எல்லாம் வழமை மாதிரிச் செய்யவேணுமெண்டு போட்டியளும் சூடு பிடிச்சிருக் கல்லே?'' எண்டானொராள். ''ஓ அது சரிதானே! செய்யத்தானே வேணும். இப்ப பெற்றோலுக்கும் வரிசையில்லை'' எண்டது மற்றொராள். ''பெற்றோல் வரிசையில்லாததுக்கு கள்ளச்சந்தை முடங்கினது தான் காரணம். உதை முதலிலையே சீராக்கியிருக்கலாமல்லே?'' எண்டு நான் சொல்ல ''ம்..ம் பெரிய இடங்களின்ரை தேவையள் முடிஞ்சதாலை கட்டுப்பாடும் திட்டங்களும் சரியாகி விட்டுது''எண்டார் மாஸ்ரர்.

''எங்கடையாக்களின்ரை வேலையளும் உப்பிடித்தான். தங்கடை பக்கத்து லாபங்கள் சரியாக, திட்டங்கள் காணாமல் போறது தான் வழமை'' எண்டு சுதன் சொல்ல ''நாங்கள்தான் பெற்றா ரோடையும் பிள்ளையளோடையும் மல்லுக் கட்ட வேண்டியிருக்கு'' எண்டுது ஒராள். ''நாட்டு நடப்பு கள் இப்பிடித்தான் போகுதோ! அப்ப உங்கடை கதை ஒப்பிரேசன் சக்சஸ் பேசன்ற டெத் அப்பிடித் தானே?'' எண்டதுக்கு எல்லாரும் விழுந்த விழுந்து சிரிக்க நான் எழும்பி மறக்காமல் செருப்பைக் கொழுவிக் கொண்டு வந்திட்டன்.

'கேர்ள் பெஸ்டி'க்கான அர்த்தத்தை கொடுக்கிறது நித்யா மேனனின் நடிப்பு.

ராஷிகா கண்ணா, பிரியா பவானி சங்கர் கதாபாத்திரம் கேட்கும் நடிப்பை கொடுத்திருக்கிறார்கள். விருமனுக்குப் பிறகு தந்தையாக மீண்டும் பிரகாஷ் ராஜ். காவல்துறை அதிகாரியாக, தந்தையாக, அப்பாவிற்கு மகனாக மட்டுமல்லாமல், சில சென்டிமென்ட்காட்சிகளில் நம்மை சிலிர்க்க வைக்கிறார்.

எல்லாவற்றையும் கடந்து நிற்கிறது பாரதிராஜாவின் நடிப்பு. வெள்ளித் திரையில் மிகச்சரியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறார். அவருடைய நகைச் சுவைக் காட்சிகள் நம்மை சிரிக்க வைப்பதுடன் வெகுவாக ரசிக்கவும் செய்கிறது. நக்கல்,லொள்ளு என புதுமையான பார்வையாளர் களுக்கு பாரதிராஜாவின் நடிப்பு நிச்சயம் ஈர்க்கும்.

படத்தில் சில இடங்களில் 'வேலையில்லா பட்டதாரி', 'யாரடி நீ மோகினி' சாயல் துருத்திக்கொண்டு தெரிவதை உணர முடிகிறது. குறிப்பாக தனுஷின் அப்பா கதாபாத்திரம் மறைந்த நடிகர் ரகுவரனை நினைவூட்டுகிறது. மற்றபடி, படத்தின் முதல் பாதி, பொறுமையாக நகர்ந்தாலும், ரசிக்கும்படியான காட்சிகளால் கவனம் பெறுகிறது.

பார்வையாளர்களின் கணிப்பை ஆங்காங்கே உடைப்பதன் மூலம் திரைக்கதையை வலுவாக்கியிருக்கிறார் இயக்குநர். குறிப்பாக, யதார்த்தை மீறி சண்டையிட்டு எதிரிகளை துவம்சம் செய்யாத நாயகனுக்கான காட்சிகள் தமிழ் சினிமாவின் வரம். தனுஷ் என்பதற்காக அவருக்கான ஹைப் காட்சிகள் கொடுக்காமல், முடிந்த அளவுக்கு கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து யதார்த்ததுடன் படமாக்கியிருக்கும் விதத்தில் இது ஒரு நல்ல மூவ். பாரதிராஜா தனது காதல் கதையை சொல்வது, தாத்தா - பேரன் இணைந்து மது அருந்துவது, சிங்கிள் ஷாட்டில் தனுஷ் பேசும் வசனம், நித்யாமேனன் - தனுஷூக்கான பாண்டிங் என படம் முழுக்க ரசிக்க நிறையவே இருக்கிறது.

**வேலையில்லா பட்டதாரி', 'யாரடி நீ மோகினி' சாயல் துருத்திக்கொண்டு தெரிவதை உணர முடிகிறது**



ஓம்பிரகாஷ் ஒளிப்பதிவில், 'கண் பாஷை பேசினால்' விஷூவல் திரையை அழகூட்டுகிறது. அவரின் அட்டகாசமான ஒளிப்பதிவை தேவையான இடங்களில் மட்டும் கச்சிதமாக வெட்டியிருக்கிறார் படத்தொகுப்பாளர் பிரசன்னா.

கதாபாத்திரங்கள் ஆழமாக எழுதப்பட்டுள்ளது. 'மனநோயாளியாக நீங்க' என்ற வசனம், பெண்களை டெம்ப்ளேட் மோடில் காட்டியிருப்பது, தந்தையின் மகன் பேசாமலிருப்பதற்கான காரணம் பெரிய அளவில் நியாயம் சேர்க்காதது என சின்ன சின்ன மைனஸ் உண்டு. இதைத் தவிர்த்து, ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது, எந்தவித கிறிஞ்சும் இல்லாமல் ஒரு உணர்ச்சிகரமான பொழுதுபோக்கு படத்தை எளிமையாகவும், எதார்த்தமாகவும் பதிவு செய்வது எப்படி என்பதை நிரூபித்திருக்கிறது படம்.

நீண்ட நாட்களுக்குப்பிறகு தமிழில் ரசிக்கும்படியான ஜனரஞ்சக சினிமாவாக வெளியாகியிருக்கும் 'திருச்சிற்றம்பலம்' திரையில் பார்வையாளர்களை ஏமாற்றாது.



# கடாவர்

## புதுக் களம், புது வழி

தடயவியல் புலனாய்வுத் துறை சார்ந்து ஒரு குற்றப் பின்னணிப் படம்தான் காடவர். அதுவும் வித்தியாசமான திரைக்கதை அணுகுமுறையுடன் வந்துள்ள நல்ல படம். அதற்காக மிகச் சிறந்த படம் என்று அர்த்தமல்ல. வருகின்ற குப்பைப் படங்களுடன் ஒப்பிடும்போது நல்ல படம்.

பிரபலமான மருத்துவர் மர்மமான முறையில் காருடன் சேர்த்து எரித்துக் கொல்லப்படுகிறார். அந்தக் கொலைக் காட்சியுடன்தான் படமே தொடங்குகிறது. இந்தக் கொலையைத் தனே செய்தேன் என்று சிறையில் இருக்கும் வெற்றி (திரிகுன்) என்கிற தண்டனைக் கைதி கூறுகின்றான். அந்தத் தகவல் ஊடகவெளியில் கசிய விடப்படுவதன் மூலம் வழக்கு இறுகுகிறது


ஆனால், சிறையில் இருக்கும் வெற்றியால் எப்படி கொலை செய்ய முடியும் என்ற கேள்வியும் எழவே, இது தொடர்பான விசாரணையில் தீவிரம் காட்டி வரும் காவல் துறைக்கு உதவுகிறார் தடயவியல் மருத்துவரான பத்ரா தங்கவேல் (அமலா பால்).

படத்தில் நடித்தது மட்டுமல்லாமல், தானே முன்வந்து தயாரித்தும் இருக்கிறார் அமலா பால். கிராஃப் கட்டிங், கையில் கத்தி, கண்ணில் வேகத்துடன் கதையை முன்னோக்கி எடுத்துச் செல்வதில் உதவுகிறார். சில இடங்களில் அவரது நடிப்பு கூடுதல் கவனத்தைப் பெறுகிறது. அவரைத் தவிர, ஹரிஷ் உத்தமன் போலீஸ் கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்துகிறார்.

படத்தின் கதாநாயகி பத்ராதான் என்றாலும் கதை நகர்த்திச் செல்லும் பாத்திரம் ஹரிஷ் உத்தமனுடையது. ஆனாலும் கதாநாயகியின் முக்கியத்துவத்தை தூக்கிக் காட்டுவதற்காக காவல் அதிகாரியான ஹரிஷ் உத்தமனை பத்ராவிற்கு பின்னால் செல்லும் நபராகக் கடைசி வரை காட்டியிருப்பது பெரும் நெருடல். அந்தப் பாத்திரத்திற்கும் நியாயம் சேர்த்திருந்தால் படம் இன்னும் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கும்

அமலாபால் முன்னின்று எல்லாவற்றையும் கண்டுபிடிக்கவும், காவல்துறை அதிகாரியான ஹரிஷ் உத்தமன் வெறுமனே வந்து செல்வது போலவும் தான் படத்தில் காட்டப்படுகிறது. அதுல்யா ரவி, வினோத் சாகர், ரித்விகா, திரிகன் உள்ளிட்ட துணைக் கதாபாத்திரங்கள் தங்கள் நடிப்பின் மூலம் த்ரில்லருக்கான தீனியைக் கொடுத்திருக்கிறார்கள்.

படம் பல எதிர்பாராத திடீர் திருப்பங்களைக் கொண்டுள் ளது. அது சுவாரஸியமாகவும் இருக்கிறது. இருந்தாலும் படத்தில் நிகழும் கொலைகளுக்கான பின் கதையின் அழுத்தம் கொலைகளை நியாயப்படுத்தப் போதுமானதாக இல்லை. அதில் சினிமாத்தனம் பட்டவர்த்தனமாகப் பளிச்சிடுகிறது திரையில் கொலைகாரனை கண்டுபிடிக்க கதாபாத்திரங்கள் மேற்கொள்ளும் பரபரப்பு, பார்வையாளரை தொற்றவில்லை என்பதுதான் பெரிய சிக்கல்.




அபிலாஷ் பிள்ளையின் எழுத்துக்கு அனூப் பணிக்கர் காட்சி வடிவம் கொடுத்திருக்கிறார். குற்றவாளியை கண்டுபிடிப்பதற்கான புலனாய்வுக் காட்சிகளை இன்னும் சுவாரஸ்யப்படுத்தியிருக்கலாம். தவிர, மெடிக்கல் க்ரைம் களத்தை உயிராக கொண்ட கதையில் அது குறித்து ஆழமாக பேசப் படாததது ஏமாற்றம். காட்சி யின் ஆன்மாவை பார்வை யாளர்களுக்கு கச்சிதமாக கடத்துவதில் அரவிந்த் சிங்கின் ஒளிப்பதிவு பெரும் பங்கு வகிக்கிறது.

முக்கியமாக கலை இயக்கத்தின் பங்கு படத்திற்கு பெரும் பலம். பிணவறை, அதன் வடிவமைப்பு, சடலங்கள் என தத்ரூபமான செட்டுகள் நம்மை உண்மையாக அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றன. அந்த வகையில் படத்தை தூணாக தாங்கி நிற்கிறது கலை இயக்கம்.

சுவாரஸ்யமான காட்சிகளையும் திரைக்கதையையும் கொண்டு கதையின் பசிக்கு உரிய தீனியிட்டிருந்தால் 'கடாவர்' நிச்சயம் விறுவிறுப்பு, த்ரில்லர் கலந்த படத்துக்கான உணர்வை பார்வையாளர்களிடம் உருவாகியிருக்கும்.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

29



## சிறுநீர் கழிக்கும்போது சிலருக்கு நடுக்கம்

சிறுநீர் கழித்து முடிக்கின்ற தறுவாயில் உடல் சிலிர்த்து நடுக்கம் உண்டாகும் அனபவமுள்ளவராக நீங்களும் இருக்கலாம். சிறுநீர் கழிக்கும்போது ஏற்படுகின்ற இந்த நடுக்கம் அனைவருக்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஏற்படுவதில்லை ஆயினும் பரவலாகப் பலருக்கு ஏற்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன...?

உடலின் துல்லியச் செயற்பாட்டின் எதிர்வினையே இந்த நடுக்கம். உடலில் சிறுநீர்ப் பையில் இருக்கின்ற நீரானது உடலின் தட்ப வெப்பத்தைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறது. அதை நாம் உடலில் இருந்து வெளியேற்றும்போது உடலின் தட்பவெப்பத்தில் திடீர் மாற்றம் நிகழ்கிறது. அந்தக் கணத்தில் உடல் வெளிப்படுத்தும் ஒருவித உணர்வே அந்தச் சிலிர்ப்பு. அதுவரை நேரமும் உடல் வெப்பத்தில் செல்வாக்குச் செலுத்திய ஒருதொகுதி நீரானது உடலைவிட்டு வெளியேற்றப்பட்டதும் உடல் வெளிப்படுத்தும் சமிக்ஞை என்றும் அதைச் சொல்லலாம். அந்த வெளியேற்றம் காரணமாக உடல் தன்னை மறுசீரமைத்துக்கொள்வதை அது காட்டுகிறது.

இதைவிட உடலில் இருந்து நீர் வெளியேறும்போது சிறுநீர்ப்பை - நரம்பு மண்டலத் தொடர்புகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது காரணமாகச் சிறுநீர்ப்பை மற்றும் நரம்புமண்டலத் தொடர்புகளுக்கிடையில் திடீர்க் குழப்பம் ஏற்படுகிறது. அதுவே நடுக்கமாக நம்மால் உணரப்படுகிறது என்றும் விளக்கப்படுகிறது.

சிறுநீரானது உடற்சூட்டுடன் வெளியேறுவதைக் காணலாம். அது வெளியேறியதும் உடல் சடுதியாக வெப்பநிலை மாற்றத்தை எதிர்கொள்கிறது. அந்தச் சந்தர்ப்பமே நடுக்கம் மற்றும் உடல் சிலிர்ப்பாக நமக்குத் தெரிகிறது. இதனாலேயே சிறுநீர் கழிக்கும்போது பலருக்கும் நடுக்கம் ஏற்படுகிறது. சிறுநீர்ப் பையில் அதிக நேரம் சிறுநீரைத் தேக்கி வைத்திருந்து நீண்ட நேரத்துக்குப் பின்னர் அதை வெளியேற்றுவதாலும் இந்த உணர்வுக்கு உட்படுகிறார்கள். அதிகநேரம் அடக்கியிருந்து விட்டுப் பின்னர் சிறுநீர் கழிக்கும்போது ஏற்படுகின்ற அந்த ஒருவித சுகத்தை அனுபவிக்கும் ரகத்தினரும் இருக்கிறார்கள் என்றால் பாருங்களேன்....?

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781